# நான் திருந்த வேண்டும்.. ஆனால்...

மூலநூல்: அஸ்ஸெய்க் : ஸாலிஹ் அல் முனஜ்ஜித் ஹபிழஹுல்லாஹ்.

தமிழாக்கம்
அப்துல் கபூர் முஹம்மது ஜெலீல் (மதனி)

# أريد أن أتوب .. ولكن

إعداد: الداعية الشيخ محمد صالح المنجد حفظه الله

ترجمة مع زيادات يسيرة

عبد الغفور محمد جليل المدني

அறபுலக அறிஞர் அஸ்ஸெய்க் ஸாலிஹ் அல் முனஜ்ஜித் அவர்களின் أريد أن أتوب ولكنஎன்ற நூலைத்தழுவி எழுதப்பட்டது.

# உள்ளடக்கம்.


| | | |
|---|---|---|
| முன்னுரை | 1 | المقدمة |
| பாவங்களை அலட்சியமாகக் கருதுவதன் விபரீதம் | 6 | خطر الإستهانة بالذنوب |
| பெரும்பாவம் என்றால் என்ன? | 11 | ما هي كبائر الذنوب |
| நம்பிக்கை சம்பந்தப்பட்ட பாவங்கள். | 12 | معاصي اعتقادية |
| துர்நடத்தைக் குற்றங்கள்.. | 15 | معاصي خلقية |
| சமூக,வாழ்வியல், உரிமை மீறல்கள். | 16 | معاصي إنسانية اجتماعية |
| தவ்பாவின் நிபந்தனைகள்.. | 17 | شروط التوبة |
| பாவச்செயலால் ஏற்படும் விபரீதங்கள். | 20 | خطورة المعاصي على النفس |
| உண்மையான தவ்பா | 28 | التوبة النصوح |

| | | |
|---|---|---|
| அனைத்துப் பாவங்களையும் அழித்துவிடும். | | تكفرالذنوب |
| அல்லாஹ் என்னை மன்னிப்பானா?? | 30 | هل يتوب الله عني ؟ |
| 100 கொலை செய்தவனுக்கும் மன்னிப்பு உண்டா? | 34 | قصة قاتل المائة والوحشي, |
| கெட்ட நண்பர்களின் சகவாசம் வேண்டாம். | 43 | الأصدقاء السوء مشكلة |
| எங்கே நிம்மதி ? | 44 | أين راحة النفس |
| திருந்தி வாழ நினை ப்போர் கேட்ட சில ஐயங்களும் அவற்றக்கான பதில்களும் | 58 | شبهات بعض الإخوان الذين هداهم الله والإجابة |
| மார்க்கக் கல்வியின் அவசியம் பற்றி சில நபிமொழிகள்.. | 110 | أحاديث عن أهمية الشرعي طلب العلم |




இஸ்லாம்கல்வி.காம்
islamkalvi.com

# முன்னுரை.

புகழனைத்தும் ஏக வல்ல இரட்சகனான அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும். அவன் நேர்வழிகாட்ட வேண்டுமென நாடியோரை யாராலும் வழிகெடுக்க முடியாது அவன் வழிகெடுக்க விரும்பியோருக்கு யாராலும் நல் வழிகாட்ட வும் முடியாது. ஸலவாத்தும் ஸலாமும் முழு மனித சமூதாயத்துக்கும் நேர்வழிகாட்டும் விளக்காக வந்த உத்தம நபி முஹம்மது (ஸல்)அவர்களுக்கும் அவர்கள் காட்டித்தந்த நேர்வழியைப் பின்பற்றி நடந்து வெற்றி பெற்ற அனைவருக்கும் உரித்தாகட்டுமாக..

அல்லாஹுத்தஆலா மனிதனை இருபிரிவுகளாக வகு த்துக்கூறுகின்றான். ஒன்று வெற்றிபெற்றவர்கள் இரண் டாம் பிரிவினர் அநியாயக்காரர்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்..

விசுவாசிகளே! அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடு ங்கள்.நீங்கள் வெற்றியடைவீர்கள்(ஸூரா நூர்:31)

என்றும் மற்றொரு இடத்தில்..



இஸ்லாம்கல்வி.காம்
islamkalvi.com

யார் பாவமன்னிப்புக் தேடவில்லையோ அவர்களே அநியாயக்காரர்கள்(ஹுஜுராத்11) என்றும் கூறுகின் றான்.

நாம் வாழக்கூடிய இக்காலத்தில் முழுமையான தீனை விட்டு அனேகம்பேர் தூரமாகி விட்டனர். பாவ காரி யங்கள் மலிந்துவிட்டன. எங்குபார்த்தாலும் பிரச்சினை களும் குழப்பங்களுமாக, நாம் ஒதுங்கிப்போனாலும் பஸாது எம்மைத் துரத்தி வரக்கூடிய மோசமான ஒரு காலத்தில் நாம் வாழ்கின்றோம். அல்லாஹ் நாடிய ஒருசிலர் மாத்திரமே பாவத்தின் பக்கம் செல்லாதவர்கள் என்று சொல்லுமளவுக்கு காலம் கெட்டுப்போய் விட்டது.

இருப்பினும் அல்லாஹ் தன் நேர்வழியையும் மக்கள் அறிந்து திருந்துவதற்குரிய ஏற்பாடுகளையும் ஒவ்வொரு காலத்திலும் செய்துகொண்டே இருக்கின்றான்.புனித குர்ஆன் மூலமும், நபியவர்களின் போதனைகளாலும், அவ்விரு ஒளிகளையும் அறிவித்துத்தரும் அறிஞர்கள் உலமாக்கள் மூலமாகவும், மேலும் ஒவ்வொரு கெட்ட மனிதனின் வாழ்வில் ஏற்படுத்தும் சில துயரம்மிக்க நிகழ்வுகளாலும் –மரணம், நோய்நொடி,விபத்து, இழப்பு இப்படி பலவற்றையும் நடத்தி ஒருவன் திருந்துவதற்

கான பல வாய்ப்புக்களை அல்லாஹ் ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றான்.

இப்படி அல்லாஹ் ஏற்படுத்திய நிகழ்வுகளால் சுய நினைவுபெற்று தான் கடந்துவந்த இருண்ட பாதையை திரும்பிப் பார்த்து – தனக்கோ, தன்னவருக்கோ,பிறருக்கோ நடந்த கதியை நினைத்து படிப்பினை பெற்று தான் போனபாதையை மாற்றி திருந்தி வாழ முடிவு செய்தோர் பலகோடி.. அல்லாஹ்விடம் மன்றாடி தமது பாவத்துக்காக தவ்பாச்செய்து,நேற்று வரைக்கும் கூத்தும் கும்மாளமும் என அல்லாஹ்வின் விரோதிகளாய் இருந்து இன்றிலிருந்து இறைநேசச் செம்மல்களாய் இருப்போரும் கோடிகோடி. நல்லதொரு தாயின் வயிற்றில் பிறந்தும் கால–நேர சோதனையால் கெட்டவர்களாகி பாவச் சுமைகளில் புரண்டுவிட்டு நரகத்தின் விளிம்புவரை சென்று விட்டு இறை கருனையால் திருந்தி நல்லவனாகி பார்போற்றும் உத்தமராக வாழ்ந்து மரணித்தோரும் பலபலகோடி..

எனவே என் அன்புநண்பா! ஏன் நீயும் அவர்களில் ஒருவனாக ஆகக்கூடாது. உன்னைவிட படுமோசமானவர்களுக்கெல்லாம் இறைவனின்கருனை இருக்கும்போது

உனக்கு மட்டும் இல்லாமலா போய்விடும்?.

அல்லாஹ் உன்னை மன்னிக்கத் தயாராக இருக்கின் றான். ஆனால் நீ தயாரா? இந்தக் கேள்விக்கு பதில்.. நீதான் முடிவுசெய்ய வேண்டும்.

எனவே உனக்கும் உன்னைப் போன்ற நண்பர்களுக்கும்.. தொழுகையில்லாமல் இபாதத்கள் இல்லாமல், றமழானில் நோன்புவைக்காமல், காசுஇருந்தும் ஹஜ் செய்யாமல் இருக்கின்றவர்களுக்காக.. எந்நேரமும் டிவியும் இசையும் பாட்டும் சினிமாவும் என ஹராத்தையே பார்த்து ஹராத்தையே கேட்டு ரசிக்கும் உன்போன்றவர்களுக் காக.. சிகரட்,பீடி, பான்பராக்கு, கஞ்சா குடியென கால த்தையும் காசையும் உடம்பையும் கெடுத்து மண்ணாக்கி க்கொண்டிருக்கும் உன்னைப் போன்றோருக்காக.. உழைப்பில் தூய்மையில்லாமல் காசு கைக்கு வந்தால் போதும் என்ற எண்ணத்தில் ஹராம் ஹலால் பாராமல் உழைத்து.. வட்டியை துரத்தாமல், பொய்யை விரட் டாமல், நம்பிக்கை மோசடி ஏமாற்று, பொய் புரட்டு என்று வாழ்வோருக்காக.. நெஞ்சில் ஈமானிய உறுதி இல்லாததால் பிறரைப்பற்றி பொய், புறம், கோள், பொறாமை, அவதூறு,போன்ற துர்க்குணங்களை அல்வா சாப்பிடுவது போல் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் உன்போன்ற என் உடன்பிறவா சகோதரர்களுக்காக –

சகோதரிகளுக்காக அனைவருக்குமாக இந்த நூலை எழுதுகின்றேன்.

இதைப்படித்ததால் உன் உள்ளம் கசிந்து இறைவழி நோக்கி நீ நடக்க ஆரம்பித்தால்.. அல்ஹம்து லில்லாஹ் என் ஆசை- நோக்கம் நிறைவேறி விட்டது.

இதைப்பாதியில் வீசிவிட்டு உன் பாதையை மாற்றா விட்டால்.. என்கடமை முடிந்துவிட்டது. ஆனால் உன் முடிவு உன் கையில்..

எனவே இதை பாதியில் தூக்கி வீசிவிடாமல் இறுதி வரை நீ வாசிக்கவேண்டும், நீ திருந்தி வாழ வேண்டு மென்பது எனது ஓரே ஆசை..அந்த ஆசையை நீ நிறை வேற்றுவாயா???

எதிர்பார்ப்புடன்..

மௌலவி ஏ.ஜி.எம் ஜெலீல் மதனி

(இந்தநூல் சேக் ஸாலிஹ் அல்முனஜ்ஜித் அவர்களது أريد أن أتوب ولكن என்ற நூலை மையமாக வைத்து எழுதப்பட்டது.)

*பாவச்செயல்களை சாதாரணமாக் கருதுவதே*

## *மிகப்பெரும் பிரச்சினை..*

ஒருவன் தன் பாவச்செயல்களிலிருந்து விடுபடாமலிருப்பதற்கு காரணமே பாவச்செயல்களை அவன் பெரிதுபடுத்தாமல் அலட்சியமாகக் கருதுவதுதான். அப்பாவத்தைச் செய்யக்கூடாதென தடுத்த அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் இல்லாமைதான்..

ஆனால் அல்லாஹ் உன்மீது எவ்வளவு இரக்கமுள்ளவன் தெரியுமா?

நபியவர்கள் சொல்கின்றார்கள்..

"ஒருமனிதனின் இடதுபக்கத்தில் அமர்ந்துள்ள மலக்கு அவன் ஒரு தப்பைச் செய்துவிட்டால் அதை உடனேயே எழுதிவிடாமல் ஆறுமணிநேரம் - அவன் தவ்பாச் செய்யட்டும் என்பதற்காகக் தாமதிக்கின்றார். அவன் அதற்குள் பாவமன்னிப்புக் கேட்டு விட்டால் அதை அப்படியே தூக்கி வீசிவிடுகின்றார். இல்லாத பட்சத்தில் ஒரு தப்புச் செய்ததாகப் பதிவுசெய்கின்றார்.. (தபரானி,பைஹகி) அல்பானி (றஹ்)அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால் மிகப்பெரிய முஸீபத்து என்னவெனில் உன் போன்ற இந்தகையவர்கள் அல்லாஹ்வின் பேச்சை மதிப்பதில்லை. அவனது தண்டனைகள் எப்படிப்பட்ட

வையென சற்றும் சிந்திப்பதில்லை. பலர் பெரும் பாவங்களைக்கூட சிறுபாவங்களாய் கருதி சர்வசாதா ரணமாக அவற்றை செய்கின்றனர். நேரிலோ, டிவியி லோ ஒரு அந்நியபெண்ணை அலங்கோலமாகப் பார்ப்பதில் தப்பா? அவளை ரசிப்பது தப்பா? தொடுவது தப்பா? இப்படித்தான் சிந்திக்கின்றனர்.. இல்லையில்லை.. விரோதியான இப்லீஸ் இப்படி சிந்திக்க வைக்கின்றான்.

இன்று குடும்பப்பத்திரிகை எனும் பெயரில் வெளிவரும் மஞ்சள்ப் பத்திரிகைகளை நாள்தவறாது வாசிக்கின்றாய் நீ.. சினிமா எனும்பெயரில் நாள்தவறாது மோசமான ஆபாசக் காட்சிகளைக் கண்டுரசிக்கின்றாய்.. சைத்தானிய காம அர்த்தங்கள் கொண்ட சினிமாப் பாடல்களை கேட்காவிட்டால் வேலை செய்ய முடியவில்லையே! என புலம்புகின்றாய்.. இதெல்லாம் கூடாது பாவம் என்று யாராவது சொன்னால் ஏன்கூடாது? என்ன பாவம்? பாவம் என்றால் எப்படிப்பட்ட பாவம்? எத்தனை கிலோ வரும் என்று கிண்டல் வேறு செய்கின்றாய்..

சினிமா எனும் சேற்றில் உன் உள்ளம் ஊறிப்போய் விட்டதால் ஹராமாக்கப்பட்ட அன்னியப் பெண்ணைப் பார்ப்பது, பேசுவது பழகுவது என்று.. காதல் என்ற பெயரில்.. காதல் செய்யாவிட்டால் அது அகௌரவம் என்று நீயே கற்பனை செய்து கொண்டு சைத்தானின்

வாலைப் பிடித்துக் கொண்டு பேயைத் தேடி ஓடும் நாய் போன்று நீயும் நஜீஸைத் தேடி ஓடுகின்றாய்..

உனது இப்பேச்சை, செயலை உன்போன்ற மனிதர் களான.. நீ முஸ்லிமாக இருக்கவேண்டும் என்பதற்காக தம் உடலை உதிரத்தை உயிரை தியாகம் செய்த ஸஹா பாக்களின் பேச்சோடு சற்று ஒப்பிட்டுப் பார்!..

அனஸ்(றழி) அவர்கள் சொல்கின்றார்கள்..

“நீங்கள் சில பாவகாரியங்களை செய்யக் காண்கின் றேன். அவை உங்கள் பர்ாவையில் மயிரை விடவும் கேவலமாக அற்பமானதாக ஆகிவிட்டன.ஆனால் நாங் கள் நபியவர்களின் காலத்தில் அவற்றை நாசத்தை ஏற்படுத்தும் மிகப் பெரும்பாவ ங்களாகவே கணக்கிட்டு வந்தோம். ( ஸஹீஹுல் புகாரி)

இப்னு மஸ்ஊத்(றழி) அவர்கள் கூறுகின்றார்கள்..
“ஒருவிசுவாசியின் உள்ளம் சிறியதொரு பாவத்தைச் செய்து விட்டாலும் தன்தலைமேல் ஒருமலைப் பாறை விழப்போவதைப் போல் அச்சமுறும். ஆனால் ஒரு பாவியானவன் ஒருபெரும்பாவத்தைச் செய்து விட்டு தன்முகத்தில் மொய்திதிருக்கும் கொசுவை விரட்டிடு வதுபோல் அலட்சியமாயிருப்பான் என்று கூறினார்கள்.

எனவே இவ்வாறு பாவச்செயல்களில் அலட்சியமாய் இருப்பவர்கள் பின்வரும் நபிமொழியைப் படித்துப் பார்த்தால் தனது செயலின் விபரீதம் தெரியவரும்.

நபியவர்கள் கூறுகின்றார்கள்..

"நீங்கள் அலட்சியமாகக்கருதும் சாதாரண பாவச்செயல்களை உங்களுக்கு எச்சரிக்கின்றேன். பாவங்களை அலட்சியமாகக் கருதுவோருக்கு உதாரணம் ஒரு பயணக்கூட்டத்தைப் போன்றது. அவர்கள் ஒரு பள்ளத்தாக்கில் இறங்கி சமைக்க ஆரம்பித்தனர். ஒருவர் ஒரு விறகுக் குச்சி பொறுக்கிவந்தார். மற்றவர் இன்னொரு குச்சியைக் கொண்டு வந்தார்.இப்படியே பெரும் தீமூட்டும் அளவுக்கு குச்சிகள் சேர்ந்து பெருநெருப்பாவிட்டது. (இப்படித்தான் உன் பாவச்செயல்களும் உனக்குத் தெரியாமலேயே அளவுக்கதிகமாகி இறுதியில் உன்னை நரகில் தள்ளி விடும். (அஹ்மத் - ஸஹீஹுல் ஜாமிஉ 2686)

இந்த ஹதீஸின் அடிப்படையிலேதான் அறிஞர்கள் சிறு பாவங்களைத் தொடர்ச்சியாகச் செய்வதும் பெரும் பாவமாகவே கருதப்படும் என்று முடிவெடுத்துள்ளனர்.

எனவே பாவம் சிறியதா? பெரியதா? எனப் பார்க்காதே. அதை யாருக்கு எதிராகச் செய்கின்றாய். அதன்மூலம்

யாருக்கு மாறுசெய்கின்றாய், யாரின் கோபத்துக்கு ஆளாகப்போகின்றாய் என்று சிந்தித்துப் பார்..

நண்பா! உனக்கு பெரும்பாவங்கள் என்றால் என்ன? சிறுபாவங்கள் என்னவென்று தெரியவில்லை போலும். அதுதான் புகைத்தல் சினிமா, இசை,காதல் கெட்ட பெண்களின் நட்பு,பொய்,புறம்,கோள்,ஏமாற்று, மோசடி, தொழுகையின்மை,நேரந்தவறித்தொழல்,நோன்பின்மை, ஆணவம் பெற்றோர் மனைவி நிந்தனை போன்ற பெரும் பாவங்களையெல்லாம் நீ சர்வசாதாரணமாகச் செய்யத் துணிந்துவிட்டாய். எனவே பெரும்பாவமென்றால் என்ன? சிறு பாவமென்றால் என்ன வென்று நீ தெரிந்து கொள்வது அவசியமல்லவா..

## பெரும்பாவம் என்றால் என்ன?

இஸ்லாமிய சட்டக்கலை சார் நிபுண அறிஞர்களின் கருத்துப்படி,பின்வரும் வரையறைக்குள் உள்ளக்கப்படும்

பாவங்கள் அனைத்தும் பெரும்பாவங்களாகவே கருதப் படும்..

1- நபியவர்கள் அழித்துவிடும் பெரும்பாவங்கள் என்று சுட்டிக்காட்டிய பாவங்கள்..

உதாரணமாக..அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், சூனியம் செய்தல், கொலைசெய்தல், வட்டியைச் சாப்படுதல், அனாதையின் சொத்தைச் சாப்பிடல், யுத்தத்தில் புற முதுகு காட்டி ஓடுதல், அப்பாவிப் பெண்களை அவதூறாகப் பேசுதல் ஆகிய ஏழு பாவங்களும்.. ( புகாரி)

பிறரைப்பற்றிக் கோள்சொல்லுதல்,சிறுநீர் கழித்துவிட்டு சுத்தம் செய்யாமல் இருத்தலும் பெரும்பாவவே..(புகாரி)

பெற்றோரைத் துன்புறுத்தல், ஒருவர் மீது வீண்பழி சுமத்துவதும் பெரும்பாவமாகும்.. (புகாரி)

பெற்றோரைத் திட்டுதல்,ஏசுதல் பிறரின் பெற்றோரை இழித்துரைத்தல், உலக லாபத்துக்காக பொய்ச் சாட்சி சொல்லுதலஆகியவைகளும்பெரும்பாவங்களாகும். (புகாரி)

2- அதேபோல் எந்தெந்தப் பாவங்களைப் பற்றி அவை சுத்த ஹராம் என்றோ, அவற்றைச்செய்தால் சுவர்க்கம் ஹராம் என்றோ,நரகம் வாஜிப் என்றோ அவற்றைச்

செய்தோரை அல்லாஹ்வோ நபியோ சபிக்கின்றனரென் றோ,அவர்களைப் பார்க்க மாட்டான்– பேச மாட்டான், பரிசுத்தப்படுத்த மாட்டான், அவர்களுக்குக் கடும் தண்ட னையுண்டு என்றோ , அல்லது அதற்கு உலகில் நிர்ண யிக்கப்பட்ட ஹத்து– தண்டனை கொடுக்கப்பட வேண்டு மென அல்குர்ஆனிலோ ஆதாரப்பூர்வமான நபிமொழி களிலோ சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகளும் பெரும்பாவங்களாகும்.

இந்த வகையில்..

<u>அகீதா – கொள்கை சார்ந்த குற்றங்களின் கீழ்..</u>

வலிமார்களிடம் பிரார்த்தித்தல், உதவிதேடல் நோயைக் குணப்படுத்துமாறு கேட்டல், அவர்களின் கப்ருகளில் முத்தமிடல் சிரம்பணிதல் குழந்தைகளைப் போட்டு உறுட்டியெடுத்து பரக்கத் தேடல், அவர்களின் பெயர் கூறி அறுத்தல், அவர்களுக்காக நேர்ச்சைசெய்தல், அவர் களின் பெயரில் சத்தியம் செய்தல், அவர்களின் போட் டோக்களை வீடுகளில் மாட்டிவைத்து பரக்கத் பெறல், அவர்களின் பெயர் கூறி ஆரம்பித்தல், அவர்களது கப்ரில் சியாரம் கட்டுதல், சியாரத்தை தரிசிக்கச்செல்லல், அவர்களின் பெயரில் உணவுபடைத்தல், அவர்கள் சாதா ரண மனிதர்களால் அறியமுடியாதவற்றை அறிவார்கள்

என்றோ மரணித்த பின்னும் அவர்களால் நமக்கு உதவ முடியுமென்றோ,அல்லாஹ்வின் அதிகாரத்தில் அவர்க ளுக்கு பங்குள்ளதென்றோ,அவர்களுக்கு பணிவிடை செய்யாவிடில் நமக்கு ஆபத்தை விளைவிப்பார்கள் என்றோ,அவர்களுக்கு நேர்ச்சைசெய்தால் காரியம் கைகூடும் என்றோ,அவர்கள் நினைத்தால் யாரையும் சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்லலாம் என்றோ நம்புவது அனைத்தும் இணைவைப்பை ஏற்படுத்தும்-நிரந்தர நரகுக்கு இட்டுச்செல்லும் பெரும்பாவங்களாகும்.

அவ்வாறே கழுத்தில் கைகால்களில் தகடுகள் தாய்த்துகள் இஸ்ம் அஸ்மாக்களை கட்டுதல் நூல் மந்திருத்துக் கட்டு தல், சாத்திரம் குறி கேட்டல் ஜோதிடம் பார்த்தல், அதை நம்புதல், சகுனம் பார்த்தல், பெரியோரின் கால்களில் விழுந்து மரியாதை செலுத்தல் இது போன்ற இன்னும் பல குற்றங் கள்-எம்மில் பலர் செய்து கொண்டிருக்கும் இவை போன்றசெயல்கள் பெரு ம்பாவங்கள் மாத்திரமி ன்றி சிர்க்கை-அல்லாஹ்வுக்கு இணை வைப்பதை ஏற்படுத்தும் மகா பயங்கர பாவங்களாகும்.

## பாலியல், துர்நடத்தைக் குற்றங்களின் கீழ்..

விபச்சாரம் புரிதல், கள்ளத் தொடர்புபேணல், கற்பழிப்பு, ஓரினச் சேர்க்கை, முஸ்ட்டித்தனம் (கரப்பழக்கம் செய்

தல்),ஆபாசப் படம்பார்த்தல் ஆபாசத்தைப்போதிக்கும் இன்றைய சாதாரண பத்திரிகை-சினிமாக்களைப் பார்த்தல், அன்னியப் பெண்களை அரைகுறை நிலையில் மறைக்க வேண்டியதை மறைக்காத நிலையில் பார்த்தல், அன்னியப் பெண்ணை முகம் பார்த்து ரசித்தல், இசை கேட்டல், விரசப்பாடல்களை ரசித்தல், நடனம் நாட்டியம் டான்ஸ் ஆடுதல் பார்த்தல், ஆண்-பெண்நட்புமுறை, காதல்-கடிதத்தொடர்புகள்,டீவி-ரேடியோக்களில்
தேவையற்ற வகையில் அன்னிய ஆண்பெண் அரட்டை கள், ஆண்-பெண் வெளியில் செல்கையில் பார்வையைத் தாழ்த்தாது அலைய விடுதல், பொது வைபவங்கள் இடங்களில் ஆண்-பெண் சந்திக்கும், பார்க்க நேரும் வகையில் ஒன்று கூடுதல், அன்னிய ஆண்-பெண் தனித்திருத்தல், பெண்கள் தனியாகப் பயணம் செய்தல் (மஹ்ரமல்லாத நெருங்கியஉற வுக்காரர்களுடனாயினும் சரியே), பெண்கள் ஹிஜாப் இல்லாமல் வெளியில் செல்லல்,அவர்களின் கைகால், இடுப்பு,வயிறு,நெஞ்சு போன்றவை வெளியில் தெரியும் வகையில் சாரி-சட்டை போன்ற ஆடைகளை அணிந்து வெளியில் செல்லுதல், உடம்புடன் ஒட்டிய வகையில் ஆடைஅணிதல், அங்கங் களை வெளிக்காட்டுமளவு மெல்லிய ஆடைகளை அணி தல், வெளியில் செல்லும் போது பெண்கள் மணம்பூசுதல், புருவங்களை வெட்டுதல் போலி சவரிமுடிகட்டுதல்,

நரைக்கு கருப்புச் சாயமிடல், அளவுக்கதிகம் அலங்கரித்துக் கொண்டு வெளியில் செல்லல், மஹ்ரம் அல்லாதவர்களுடன் தேவையற்ற வகையில் பேசுதல், சிரித்தல், கேலிசெய்தல், ஒன்றாகக் கூடியிருத்தல், ஒன்றாகச் சாப்பிடல் இவைபோன்ற அனைத்துமே அல்லாஹ்வுக்குக் கோபத்தையூட்டும் அவனது தண்டனைக்கு இலக்காகும் கடுமையான பாவச் செயல்களாகும்.

## சமூக விரோதக் குற்றங்களின் கீழ்..

மதுபானம் பாவித்தல், புகைப்பழக்கம், பீடி, பான்பராக்கு, போதைப்பழக்கம், கஞ்சா,அபின் பாவனை,வட்டிக்கு கொடுத்தல் வாங்குதல்,சுதாட்டம்,லாட்டரி (லொத்தர்) சீட்டு விற்றல் வாங் குதல், லஞ்சம்,ஊழல் இன்னும்இவை போன்ற எத்தனையோ பாவங்களும்..

## <u>வாழ்வியல் குற்றங்களின் கீழ்..</u>

ஆண்கள் கரண்டைக்காலுக்குக் கீழ் ஆடையை தொங்கவிடல், தாடிவைக்காது முகச்சவரம் செய்தல், பெரிய மீசை வைத்திருத்தல், பெற்றோரைத் துண்புறுத்தல்,அவர்களை ஒதுக்கிவைத்தல், கணவன்மனைவி குடும்ப ரகசியங்களைப் பற்றி பிறரிடம் பேசுதல், மனைவி கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்காதிருத்தல், கணவன் தன் மனைவியை கடுமையாக நடத்துதல்,

பெற்றோர் குழந்தைகளுக்கு மத்தியில் பாரபட்சம் காட்டுதல் இன்னும் இவை போன்ற எத்தனையோ பாவங்களும்..

## மனிதஉரிமை மீறல் குற்றங்களின் கீழ்..

புகைத்தல்,கொலை,களவு, சூது,பொய்,புறம்பேசல் ஏமாற்றுதல், மோசடி, வாக்கு மீறல், பொய்ச்சாட்சி, சூழ்ச்சி செய்தல் போன்ற இன்னும் பல பாவங்களும் பெரும்பாவங்களின்அடங்கிப் போகின்றன..

இப்போது சொல்!

நீ இவற்றில் அலட்சியமாகக் கருதிச் செய்யும் பாவங்கள் எத்தனை? இவை அல்லாஹ்வின் கோபத்தை ஏற்படுத்தி உன்னை சுவனம் செல்லாமல் தடுத்து நரகத்துக்கு இழுத்துச் செல்லும் பெரிய பாவங்களா இல்லையா? நீயே சொல் !

எனவே உன் நிலையை நீ இப்போதே மாற்றிக்கொள் ளாவிட்டால் மிகப் பயங்கரமிக்க இருண்ட எதிர் காலத்தை நோக்கி நீ நடக்கின்றாய் என்றே அர்த்தம். நீ உன் மறுமை வாழ்வைத் தொலைத்து நாசமாகி விடப் போகின்றாயா? பயங்கர வேதனை மிக்க நரகத்துக்குச் செல்வதுதான் உன் விருப்பமா?

எனவேதான் சொல்கின்றேன் என் அன்பு நன்பா! நீ அனைத்துப் பாவங்களையும் விட்டுவிடு . இவற்றுக்குப் பரிகாரம் தேடிவிடு. அல்லாஹ்விடம் சரணாகதியாகி அவனிடத்தில் அனைத்துப் பாவங்களுக்கும் தவ்பாச் செய்துவிடு.

ஆம் நண்பா! தவ்பாச் செய்துவிடு. ஆனால் அது உண்மையான தவ்பாவாக இருக்க வேண்டும். இன்று தவ்பா. நாளைமறுபடி அதேபாவம் அடுத்தநாள் மீண் டும் தவ்பா இதற்குப்பெயர் அல்லாஹ்விடத்தில் தவ்பா கிடையாது. இது அல்லாஹ்வையே ஏமாற்ற முயற் சிக்கும் ஈனச் செயல்.. எனவே உன்மையான தவ்பா – பாவ விமோசனம் தேடல் என்றால் என்ன என்று நீஅறி ந்திட வேண்டுமல்லவா.. அதன்நிபந்தனைகள் என்ன வென்று நீ தெரிந்திடவேண்டுமல்லவா..எனவே தொட ர்ந்து இறுதிவரை இந்த நூலைப் படி..

# தௌபாவின் நிபந்தனைகள்.

தவ்பாஎனும் சொல்லுக்கு மிக ஆழமான கருத்து உள் ளது. சிலர் நினைப்பதுபோல் வருடத்தில் ஒருதடவை கூட்டாகக்கூடி இமாம் சொல்லித் தருவதை என்ன வென் று புரியாமலே சொல்லி ஆமீன் கூறிவிட்டு பள்ளியை விட்டு வெளியாகி, .. உடனேயே திரும்பவும் பழைய படி பாவத்தில் விழுவதற்கு தவ்பா எனும் பெயரை உபயோ கிப்பதே தவறு. அல்லாஹ் கூறுகின்றான்..

إِنَّمَا ٱلتَّوْبَةُ عَلَى ٱللَّهِ لِلَّذِينَ يَعْمَلُونَ ٱلسُّوٓءَ بِجَهَٰلَةٍ ثُمَّ يَتُوبُونَ مِن قَرِيبٍ فَأُوْلَٰٓئِكَ يَتُوبُ ٱللَّهُ عَلَيْهِمْ ۗ وَكَانَ ٱللَّهُ عَلِيمًا حَكِيمًا ﴿١٧﴾

தவ்பா என்பது அறியாமையால் தவறு செய்து விட்டு அதற்கு உடனடியாக (வருந்தி) மன்னிப்புக் கேட்போருக்குத்தான்.. அல்லாஹ் அவர்களுக்கே பாவ மன்னிப்பை வளங்கிடுவான். அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனும் மிக்க ஞானமுள்ளவனாகவும் இருக்கின்றான். ( ஸூரா நிஸாஃ 17)

மற்றொரு இடத்தில்...

وَيَٰقَوْمِ ٱسْتَغْفِرُوا۟ رَبَّكُمْ ثُمَّ تُوبُوٓا۟ إِلَيْهِ يُرْسِلِ ٱلسَّمَآءَ عَلَيْكُم مِّدْرَارًا

எனது கூட்டத்தினரே..அல்லாஹ்விடத்தில் நீங்கள் இஸ்திக்பார் செய்யுங்கள் பின்னர் தவ்பாச்செய்யுங்கள்"

எனவே தவ்பாஎன்பது இனிமேல் திருந்தி நடப்பதென்று உறுதியாக முடிவெடுத்ததன் பின்னர் செய்யப்பட வேண்டும் என்பது தெரியவருகின்றது.

எனவே குர்ஆனையும் நபிமொழிகளையும் வைத்து ஆய்வுசெய்யும் போது உண்மையான பாவமன்னிப்பு

பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்கவேண்டும் என்பது தெரிய வருகின்றது.

## முதலாவது நிபந்தனை :

மனத்தூய்மையான உள்ளத்துடன் – அல்லாஹ்வுக்குப் பயந்து இந்த பாவமன்னிப்பு இடம்பெற வேண்டும்.

இதற்கு மாற்றமாக பாவத்தைச்செய்ய முயற்சித்து விட் டு தோற்றுப்போய் முடியாததால், சந்தர்ப்பம் தவறிவிடுவத தால் அதை நீ செய்யாது விட்டால் நீ அல்லாஹ்வுக்காக அதைவிட்டதாக ஆகாது. அவ்வாறே பிறர் உன்னைத் தண்டிப்பார்கள், தப்பாக நினைப்பார்கள். சமூகத்தில் உன் அந்தஸ்த்து குறைந்துவிடும், அல்லது அத்தவறு களைச் செய்தால் தீராத நோய் உன்னைப் பீடிக்கும், அல்லது நீதிமன்ற த்தல் தக்க தண்டனை கிடைக்கும் என்பது போன்ற காரணங்களுக்காக பயந்துவிட்டாலும் அது அல்லாஹ்வுக்காக விட்டதாக ஆகாது.

நபியவர்கள் சொல்வதைகச் சற்று கவனித்துப் பார்!..

“உலகில் மனிதர்கள் நான்கு வகைப்படுவார்கள். ஒரு வருக்கு அல்லாஹ் (இறையச்சமிக்க)அறிவையும் செல் வத்தையும் ஒன்றாகக் கொடுத்திருப்பான். அவர் கற்ற அறிவால் அல்லாஹ்வைப் பயந்து உறவினருக்கு உதவி

அல்லாஹ்வின் கடமைகளையும் நிறைவேற்றி வாழ்பவர். இவர் அல்லாஹ்விடத்தில் மிக உயர்ந்த அந்தஸ்த்தில் இருப்பார். அடுத்தவருக்கு அல்லாஹ் அறிவைக் கொடுத் திருப்பான் செல்வத்தைக் கொடுத்திருக்க மாட்டான். அவர் உண்மையான எண்ணத்துடன் அல்லாஹ் எனக்கு செல்வத்தையும் தந்திருந்தால் அவரைப்போல் இன்னும் பல நல்ல காரியங்கள் செய்திருப்பேனே என்று எண்ணு கின்றார். இவருக்கும் அவரது நல்ல எண்ணத்துக்காக அல்லாஹ் முதலாமவருக்கு கொடுத்த அதே உயர்ந்த அந்தஸ்த்தைக் கொடுக்கின்றான். மூன்றாமவருக்கு அல்லாஹ் மார்க்க அறிவைக்கொடுக்கவில்லை ஆனால் செல்வத்தைக் கொடுத்திருக்கின்றான். இவர் அறிவில்லா ததால் அல்லாஹ்வுக்குரிய கடடையையோ உறவினர்க் குரிய கடமையை யோ செய்யாது மனம்போனபோக்கில் சதா பாவத்திலேயே மூழ்கிக்கிடக்கின்றார். இவர் அல்லா ஹ்விடத்தில் மிகமோசமான ஸ்தானத்தில் இருக்கின் றார்.நான்காமவருக்கு அல்லாஹ் மார்க்கக்கல்வியையோ செல்வ த்தையோ கொடுக்கவில்லை.இருப்பினும்இவர் நானும் பணக்காரனாக இருப்பின் அந்த மூன்றாம் நபரைப் போல எல்லாப்பாவங்களையும் செய்து உலக இன்பங்களை அனுபவிக்கலாமே என மனதில் எண் ணியவராயிருப்பார். இவர் அப்பாவங்களைச் செய் யாவிட்டாலும் இவரது கெட்டஎண்ணத்துக்காக அல்

லாஹ் மூன்றாவது நபருக்குக் கொடுத்த மிக மோசமான ஸ்தானத்தையே இவருக்குக் கொடுக்கின்றான்.

( அஹ்மத்- ஸஹீஹுத் தர்ஹீப் அல்பானி 1-9 )

## இரண்டாவது நிபந்தனை:

நீ செய்த அப்பாவத்தை உடனடியாக நிறுத்தி விட்டு அதிலிருந்து விலகிவிட வேண்டும்.

இமாம் இப்னு கைய்யும் அவர்கள் தனது நூலில் பாவ

ச்செயல்களால் மனிதனுக்கு ஏற்படும் நஸ்டங்களைப் பட்டடியல் போட்டுக் காட்டுகின்றார்கள்.அவர்கள் சொல் கின்றார்கள்..

பாவச்செயலானது...

- உன் மார்க்க அறிவை – பற்றை அழித்துவிடும்.
- உன் வாழ்கையில் விரக்தியை ஏற்படுத்தும்.
- உன் வாழ்வினில் பல சிக்கல்களை உருவாக்கும்.
- உன் உடல் இழைத்து சோர்வுற்றுவிடும்.
- இறையச்சம் உன்னை விட்டும் ஓடிவிடும்.
- வாழ்வில் பரக்கத்தை நீக்கிவிடும்.
- நற்செயல்கள், நல்ல சிந்தனைகள் ஓடிவிடும்.

- இதயம் கனத்துப்போய் நிம்மதி பறிபோய் விடும்.
- ஒருபாவம் பலபாவங்களாக அதிகரித்துச்செல்லும்.
- அல்லாஹ்வின் பார்வையில் நீ கேவலமாவனாவாய்.
- மக்களின்பார்வையிலும் நீ மதிப்பற்றவனாகிடுவாய்.
- அல்லாஹ்வின் சாபத்துக்குரியவனாக நீ மாறுவாய்.
- மிருகங்கள் கூட உன்னைச் சபிக்கின்றன.
- உன் பிரார்த்தனை ஒப்புக்கொள்ளப்படாது.
- உன்னால் கடலிலும் தரையிலும் ஏனையோருக்கு பல தொந்தரவுகள் - முஸீபத்துகள் ஏற்படுகின்றன.
- வெட்கம்,ரோசம்,மானம் மரியாதையெல்லாம் உன்னைவிட்டு மாயமாய் மறைந்துவிடுகின்றன.
- அல்லாஹ்வின்றஹ்மத் உன்னைவிட்டும் ஓடிவிடும்.
- உன் உலக வாழ்வு அர்த்தமற்றதாகி விடுகின்றது.
- நீ சைத்தானால் விலங்கிடப்பட்டு விடுகின்றாய்.
- உன் இறுதி முடிவு கெட்டதாகவே அமையும்.
- நீ நரகவாதியாக மரணிக்கப்போகின்றாய்.
- கப்ரிலும் மறுமையிலும் உனக்கு பல கொடிய வேதனைகள் காத்திருக்கின்றன.

(நூல்: அத்தாஉ வத்தவாஉ )

மூன்றாவது நிபந்தனை :

இப்பாவத்தை செய்ததால் அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளாகி விட்டோமே என்று அதற்காக மனதால் வருந்த வேண்டும். நபியவர்கள் கூறுகின்றார்கள்..

“பாவமன்னிப்பு என்பதே அப்பாவத்தை செய்து விட்டோமே என்று வருந்துவதுதான்.

(அஹ்மத்- ஸஹீஹுல் ஜாமிஉ 6802)

## நான்காவது நிபந்தனை:

இனிமேல் அப்பாவத்தின் பக்கம் செல்லவே மாட்டேன் என்று உறுதியான எண்ணம் வைக்க வேண்டும்.

## ஐந்தாவது நிபந்தனை:

அப்பாவம் மற்றவரின் உரிடையோடு சம்பந்தப்பட்டிருப்பின் அதை உரியவரிடம் மீளக் கொடுக்க வேண்டும். அல்லது அவரிடம் அதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்.

## ஆறாவது நிபந்தனை:

தவ்பாச் செய்வதற்கும் ஒரு காலவரையறைண்டு.அதாவது உயிர் தொண்டைக்குழிக்கு வரும் நேரத்திற்கு முன்னதாகவே உன் தவ்பா இடம்பெறவேண்டும். அந்த நேரத்தில் ஒவ்வொரு மனிதனும் அல்லாஹ்வை எற்று

திருந்தி தவ்பாச் செய்யவே எத்தனிப்பான். ஆனால் அதை அல்லாஹ் ஏற்பதில்லை.

அல்லாஹ்கூறுகின்றான்..

وَأَنفِقُوا۟ مِن مَّا رَزَقْنَـٰكُم مِّن قَبْلِ أَن يَأْتِىَ أَحَدَكُمُ ٱلْمَوْتُ فَيَقُولَ رَبِّ
لَوْلَآ أَخَّرْتَنِىٓ إِلَىٰٓ أَجَلٍ قَرِيبٍ فَأَصَّدَّقَ وَأَكُن مِّنَ ٱلصَّـٰلِحِينَ

وَلَن يُؤَخِّرَ ٱللَّهُ نَفْسًا إِذَا جَآءَ أَجَلُهَا ۚ وَٱللَّهُ خَبِيرٌۢ بِمَا تَعْمَلُونَ ﴿١١﴾

நாம் உங்களுக்குக் கொடுத்தவற்றிலிருந்து உங்களுக்கு மரணம் சம்பவிப்பதற்கு முன்னரே நல்வழியில் செலவு செய்து கொள்ளுங்கள். (மரண நேரத்தில்) அம் மனிதன் என் றப்பே என் உயிரை சற்றுநேரம் கழித்து கைப்பற்ற வேண்டாமா? நான் (அதற்கிடையில்) ஸதகாக்கள் செய் து நல்லவர்களில் ஒருவனாக ஆகிடுவேனே! என்று கத றுவான். அல்லாஹ் எந்த உயிரையும் அதன் தவணை வந்துவிட்டால் சற்றும் பிற்படுத்தப் போதில்லை. நீங்கள் செய்பவற்றை அவன் நன்கு அறிந்தவனாகவே இருக்கி ன்றான்.. ( ஸூரா முனாபிக்கூன் 10-11)

நபியவர்கள் கூறுகின்றார்கள்..

யாரேனும் உயிர் தொண்டைக்குழியில் ஊசலாடும் நேர த்துக்கு முன்னதாக தவ்பாச்செய்தால் அல்லாஹ் அவரது தவ்பாவை ஏற்றுக்கொள்வான்.(அஹ்மத்- ஸஹீஹுல் ஜாமிஉ 6132)

ஆனால் உன்உயிர் எப்போது தொண்டைக்குழிக்குள் வரும் என்பது உனக்குத்தெரியுமா? அப்படித் தெரிந்தால் அதுவரைக்கும் நீ தவ்பாச்செய்யாமல் இருக்கலாம். ஆனால் அப்படியில்லையே! இவ்வருடமே உன் கடைசி வருடமாக இருக்கலாதானே! ஏன் இந்த நிமிடமே உன் கடைசி நிமி\மாகவும் இருக்கலாம். நீ வீதியில் செல்லும் போதோ, கடக்கும்போதோ பின்னால் வரும்வண்டி உம்மேல் பட்டுவிட்டால் போதுமே அது தான் உன் இறுதிவினாடி!. நீ சுவாசிக்கும்போது மூச்செடுக்க முடி யாமல் போய்விட்டால் போதுமே! அது தான் உன் இறுதி வினாடி. நீ வேலை செய்யும்போது நெஞ்சுவலித்து குந்திவிட்டால் அதுதான் உன் இறுதி வேலையாகி விடு மே? ஏன் நீ குளிக்கும்போது வழுக்கி விழுந்துவிட்டால் பின்னர் நீ குளிக்க முடியாது. உன்னை குளிப்பாட்ட த்தான் முடியும்.

அப்படியிருக்க எப்படி உன்னால் இன்னும் பாவத்தில் இருக்க முடிகின்றது. உன் மனம் ஏன் திருந்திவாழ மறுக்கின்றது. ஆம் ஏனெனில் நீ இப்போது சைத்தா னின் பிடியில் இருக்கின்றாய் அதுதான் காரணம். அவன் உன்னை வழிகெடுத்து நரகில் தள்ள இருக்கின்றான் என்று தெரிந்துகொண்டே நீ அவன் வழியில் இன்னும் சென்றுகொண்டிருக்கின்றாயே!! இதுதான் ஆச்சரியம்.

நண்பா! உன்னைப்படைத்த அல்லாஹ் உனக்கு அவனது அருட்கொடைகளை கோடிகோடியாக அள்ளி இறைத் திருக்கும் போது உன்னால் எப்படி அவனுக்கு மாறு செய்ய முடிகின்றது. உனக்கு மனச்சாட்சியே இல்லையா? நீ உண்மையில் மனிதனா அல்லது மிருகமா?

நீ பெற்றுருக்கும் அருட்கொடைகளை எண்ணிப்பார்!.

உனது கண்ணில் தூசுபட்டு கண்பார்வை போய் விட் டால் உனக்குப் பெயர் கபோதி குறுடன்.

நீ இசைகேட்கும் செவி அதன்திறணை இழந்தால் உன க்குப்பெயர் செவிடன்.

பொய்,புறம்பேசும் உன் நாக்கு பேச மறுத்தால் உன் பட்டப்பெயர் ஊமையன்.

வழியில் நீ வழுக்கிவிழுந்து கால் இழுந்துக் கொண்டால் உன் புனைப்பெயரோ முடவன்.

உன் தலையில் சற்று அடிபட்டு மூளை கலங்கி விட்டால் உனக்குக் கிட்டும் பெயர் பைத்தியம்.

இவை எதுவும் நடக்காமல் சதா நேரமும் உன்னைக் காக்கும் உன் றப்புக்கு நீ செய்யும் நன்றிக்கடன்தான் அவனது எதிரியுடன்-சைத்தானுடன் நீ நட்புக் கொள்

வதா? நீ செய்வது அக்கிரமமா இல்லையா? உனது நெஞ்சைத் தொட்டு சொல் பார்க்கலாம்.

உன்வீட்டின் எச்சில்பாத்திரத்தை சாப்பிட்ட ஒரு யாசகன் கூட அடுத்தவனுக்கு விசுவாசம் காட்டினால் உன்னால் பொறுக்க முடியவில்லை. ஆத்திரப்பட்டு நாயே! என்று ஏசகிறாய்.. அவனை அடித்துவிரட்டுகின்றாய். அப் படியெனில் அல்லாஹ்வின் இத்தனை சலுகைகளையும் அனுபவித்துக்கொண்டு அவனை வணங்காதிருப்பது ஒருபுறமிருக்க அவனது எதிரியான சைத்தானுடன் சேர்ந்துகொண்டு கூத்துப்போட்டால் உன்மீது அவனு க்கு எவ்வளவு ஆத்திரம்வரும் சிந்தித்துப்பார்.

ஏதோ.. போனதுபோகட்டும் ! இப்போதாவதுஉனக்குப் புத்திவந்ததே அது அல்லாஹ் உன்மீது செய்த மிகப் பெரிய கருணை. ஆம் இன்றே.. இப்போதே புறப்படு தவ்பாச்செய்துவிடு. இனி சற்றும் தாமதிக்காதே!.

தவறுசெய்தல் ஒன்றும் யாருமே செய்யாத செயலல்ல. பலர் பாவம்புரிந்துதான் உள்ளனர். ஆனால் தான் செய் தது தப்பு என்று தெரிந்தபின்னும் அதை உணராமல் - அதற்காக வருந்தி மன்னிப்புக் கோராமல் தொடர்ந்தும் அதில் நீடிக்கின்றானே அவன்தான் அல்லாஹ்வின் மிகப்பெரிய விரோதி. தப்புக்காக வருந்தி மன்னிப்பு


இஸ்லாம்கல்வி.காம்
islamkalvi.com

க்கேட்பவன் தப்பே செய்யாதவன் போலாவான் என்ற ஹதீஸை எண்ணிப் பார்!.

இதோ ஸஹாபாக்கள் சிலரது வாழ்வில் இடம்பெற்ற நிகழ்வுகளைக் கவனித்துப்பார்!.

புரைதா( றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்...

மாயிஸ் பிக் மாலிக் எனும் ஒரு நபித்தோழர் ஒருநாள் நபிகளாரிடத்தில் வந்து அல்லாஹ்வின் தூதரே! நான் எனக்கே அநியாயம் செய்துகொண்டேன். ஆம் நான் விபச்சாரம் செய்துவிட்டேன் என்றார். நபியவர்கள் எதுவும் சொல்லாமல் அவரைத் திருப்பியனுப்பி விட் டார்கள். மறுநாளும் அதேபோல்வந்து அல்லாஹ்வின் தூதரே நான் விபச்சாரம் செய்து விட்டேன். எனக்குத் தண்டனை தந்து என்னைப் பரிசுத்தப்படுத்துங்கள் என்றார். அப்போதும் நபியவர்கள் அவரைத் திருப்பி யனுப்பி விட்டார்கள். மூன்றாம் நாளும் அவர் வந்து கேட்டபோது அவரது வீட்டுக்கு ஆளனுப்பி உங்கள் கண வர் புத்திசுவாதீனமற்றவரா? எதையாவது உளறுபவறா? என விசாரித்து வரச்சொன்னார்கள். அப்படியெல்லாம் எதுவும் கிடையாது அவர் நன்கு புத்திசுவாதீனமுள்ளவர் தான் என பதில் வந்தது. பின்னர் நான்காவது தடவை யாக அவர் வந்து தனக்குத் தண்டனை தருமாறு கேட்ட

போது ஒரு குழி தோண்டுமாறு உத்தரவிட்டு அதில் அவரை இறக்கிவைத்து கல்லெறிந்து கொல்லுமாறு

உத்தரவிட்டார்கள்.

பின்னர் காமிதிய்யா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணும் இவ்வாறே நபியவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! நான் விபச்சாரம் செய்துவிட்டேன். எனக்குத் தண்டனையளித்து என்னைச் சுத்தப்படுத்துங்கள் என்று கூறினார்.அவளையும் நபியவர்கள் திருப்பியனுப்பிவிட்டார்கள். மறுநாளும் அவ்வாறே நபியவர்களிடத்தில் வந்து முறையிட அப்போதும் திருப்பியனுப்பி விட்டார்கள். இப்படியே நான்காவது தடவையும் வந்துமுறையிட்டுவிட்டு அல்லாஹ்வின் தூதரே நீங்கள் மாயிஸ் என்பவரைத்த திருப்பினுப்பியது போல் என்னையும் திருப்பியனுப்ப எண்ணுகின்றீர்கள். ஆனால் நான் இப்போது (அவ்விபச்சாரத்தினால்) கர்ப்பம் தரித்திருக்கின்றேன் என்றார்.அப்போது நபியவர்கள் நீ இப்போது திரும்பிச்செல் குழந்தையைப் பிரசவித்தன் பின் மீண்டும் வா என்றார்கள். அவ்வாறே அவர் பிரசவித்த குழந்தையை ஒரு துணியில் வைத்துச் சுற்றிய வண்ணம் நபிகளாரிடத்தில் வந்தாள். நபியவர்கள் அவளைப் பார்த்து திரும்பச்சென்று அக்குழந்தைக்குப் பாலூட்டு. பால்குடி மறந்ததும் என்னிடம் வா என்றார்

கள். அவ்வாறே அப்பெண் தன் குழந்தை பால்குடி மறந் ததும் அதன் கையில் ரொட்டித் துண்டு ஒன்றைக் கொடு த்து அழைத்துவந்து இதோ அல்லாஹ்வின் தூதரே! இக்குழந்தை பால்குடிமறந்து விட்டது என்றார். அதன் பின் நபியவர்கள் அக்குழந்தையை ஒருவரிடம் ஒப்படை த்துவிட்டு அவரது ஆடையை உடலுடன் இறுகக் கட்ட ச்செய்து நெஞ்சுவரைக்கும் ஆழமான குழியொன்றினைத் தோண்டி அதற்குள் அவ ரைப் புதைத்து கல்லெறியுமாறு கட்டளையிட்டார்கள். அப்போது காலித்பின்வலீத் அவர் கள் எறிந்த ஒரு கல் அவளின் தலையில் பட்டு இரத்தம் அவரின் உடையில் தெறிக்கவே சீ! எனக்கூறி அவளுக்கு ஏசினார்கள். அப்போது நபியவர்கள். காலிதே! பொறு ங்கள். அப்படி ஏசவேண்டாம். அப்பெண் மிகப் பரிசுத்த மாக தவ்பாச் செய்துள்ளார். அத்தவ்பாவை மதீனாவி லுள்ள எழுபது பேருக்கு பங்குவைத்தாலும் அவர்கள் அனைவருக்கும் அது போதுமையாகும் என்றார்கள்.

( முஸ்லிம் )

## உண்மையான தவ்பா நிச்சயமாக அனைத்துப் பாவங்களையும் அழித்துவிடும்.

நண்பா! நீயோ உன்போன்ற சிலரோ சிலவேளை இப்படி நினைக்கலாம். நான் கடந்த காலத்தில் செய்த அனைத்துப் பாவங்களுக்கும் தவ்பாச்செய்யத் தயாராக இருக்கின்றேன். ஆனால் அவற்றை அல்லாஹ் மன்னிப்பான் என்பதற்கு என்ன உத்தரவாதம். அப்படி மன்னிக்காவிட்டால் எனக்குத் தண்டனை உறுதி தானே! எனவே நான் ஒரேயடியாகத் திருந்தாமலேயே இருந்துவிடுகின்றேன் என்று எண்ணலாம். நிச்சயமாக இது சைத்தானின் தூண்டுதலால் ஏற்பட்ட எண்ணமாகும்.

இருப்பினும் நீநினைத்தது போன்றே ஸஹாபாக்களின் காலத்தில் குப்ரிலும் சிர்க்கிலும் பஞ்சமா பாதக பாவச் செயல்களிலும் புரண்டுவிட்டு திருந்தவிரும்பிய சிலரும் எண்ணியிருந்தார்கள்.

எனவே அப்படிப்பட்ட இருவரின் சம்பவங்களை இங்கு படித்துப்பார்!

## அம்ருபின் ஆஸ் (றழி) இஸ்லாத்தை ஏற்ற சம்பவம்.

தனது சம்பவத்தை அவர்களே சொல்கின்றார்கள்..

நான் பல காலங்களாக வழிகேட்டிலேயே இருந்து விட்டேன். அல்லாஹ் என் இதயத்தில் இஸ்லாத்தைப் பற்றிய ஆர்வத்தைப் போட்டபோது நபிகளிடத்திலே வந்து நபியே! உங்கள் கையை நீட்டுங்கள். பைஅத்- உறுதிமொழி தருகின்றேன் என்று கூற நபியவர்களும் கையை நீட்டினார்கள்.அப்போது நான் திடீரென என் கையை இழுத்து மடக்கிக் கொண்டேன். உடனே நபிய வர்கள் அம்ரே! உனக்கென்ன நேர்ந்தது என்றார்கள். உடனேநான் ஒரு நிபந்தனை! என்றுகூற அதென்ன நிப ந்தனை? என்றார்கள். நானோ அல்லாஹ் எனது பாவங் களை மன்னிக்கவேண்டும். அதற்கு நீங்கள் உறுதியளிக்க வேண்டும், அது தான் நிபந்தனை என்றேன். அதற்கு நபியவர்கள் அம்ரே! உனக்குத் தெரியாதா? இஸ்லா த்தை ஏற்பது அதற்குமுன்னால் ஒருவர் செய்த பாவங்க ளை அழித்துவிடும், ஹிஜ்ரத் செய் தலும் அதற்குமுன்னர் அவர்செய்த பாவங்களை அழித்துவிடும். அவ்வாறே புனித ஹஜ் கடமையை நிறைவேற்றலும் அதற்கு முன்

னர் அவர் செய்த பாவங்களை அழித்துவிடும் என்றார்கள் . (ஸஹீஹ் முஸ்லிம்)

## அடுத்த சம்பவம்:

நபியவர்களின் காலத்தில் பல கொலைகளும் விபச்சாரமும் செய்த ஒருமனிதர் இருந்தார். அவர் நபியவர்களிடத்தில் வந்து நீங்கள்சொல்லும் கடவுளும் உங்கள் கொள்கையும் நல்லவைதான். ஆனால் நான் பாவத்திலேயே எனது காலத்தைக் கடத்திவிட்டேன். எனவே நான் இஸ்லாத்தை ஏற்பேன்.. ஆனால் நான் முன்செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தம் உண்டா? என்று வினவினார். அப்போதுதான் பின்வரும் வசனம் இறங்கியது.

" தமக்குத்தாதே அநியாயம் செய்து கொண்ட எனது அடியார்களே! அல்லாஹ்வின் றஹ்மத்தினை விட்டும் நீங்கள் நம்பிக்கையிழந்து நிராசையாகி விடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் அனைத்துப் பாவங்களையும் மன்னிப்பான். அவன் மிக்க மன்னிப்பவனும் கருனையாளனுமாய் இருக்கின்றான் என்றவசனம் இறங்கியது.



இஸ்லாம்கல்வி.காம்
islamkalvi.com

நண்பா! இந்தக் கவலை உனக்குத் தேவையற்றது, வல்ல அல்லாஹ்வைப் புறக்கணித்துவிட்டு விக்கிரகங்களை வணங்கிய.. ஈஸா(அலை)வையும் மர்யத்தையும் வண ங்கிய, அல்லாஹ்வுக்கு இணைகற்பித்த காபிர்களையே அவர்கள் தவ்பாச்செய்யத் தயாராக இருந்தால் தானும் மன்னிக்கத் தயாராக இருப்பதாகக் கூறுகின்றானே. அல்லாஹ்வை நம்பாமல் முஸ்லிம்களைப்போல நடித் துக் கொண்டிருந்த முனாபிகீன்களைப் பார்த்தே நீங் கள் திருந்தத் தயாராக இருந்தால் நான் மன்னிக்கத் தயாராக இருக்கின்றேன் என்று கூறுகின்றானே. அப்படியான கருனையாளனான அல்லாஹ்வின் பார்வையில் உனது பாவங்களை மன்னிப்பது வெறும் தூசு போன்றது. அவ ன் எப்பேர்ப்பட்ட பாவியையும் மனந்திருந்தி வந்தால் மன்னிக்கத் தயார் என்று பகிரங்கமாக அறிவித்து விட்டான். எனவே நீயும் அப்படியானால் நானும் திருந்தி வாழத்தயார்! என்று அறிவிப்பாயா? அல்லாஹ் வின் பெயரால் அந்த உறுதிமொழியை எடுக்க நீ தயா ரா?? அல்லாஹ் சொல்வதைப் பார்!.

لَّقَدْ كَفَرَ ٱلَّذِينَ قَالُوٓا۟ إِنَّ ٱللَّهَ ثَالِثُ ثَلَٰثَةٍ ۘ وَمَا مِنْ إِلَٰهٍ إِلَّآ إِلَٰهٌ وَٰحِدٌ ۚ وَإِن
لَّمْ يَنتَهُوا۟ عَمَّا يَقُولُونَ لَيَمَسَّنَّ ٱلَّذِينَ كَفَرُوا۟ مِنْهُمْ عَذَابٌ أَلِيمٌ ﴿٧٣﴾

أَفَلَا يَتُوبُونَ إِلَى ٱللَّهِ وَيَسْتَغْفِرُونَهُۥ ۚ وَٱللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ﴿٧٤﴾

நிச்சயமாகவே அல்லாஹ் மூன்றுபேர் என்று கூறிய

(கிருஸ்த்த)வர்கள் நிச்சயமாகக் காபிராகி விட்டார்கள். ஒரேயொரு கட வுளைத் தவிர வேறுகடவுளே இல்லை. அவர்கள் இவர்களது அச்செயலிலிருந்து விலகிக்கொள் ளாவிடில் அவர்களில் காபிரானவர்களை நிச்சயமாக நரக நெருப்பு தீண்டும். அவர்கள் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேட்டு திருந்திட மாட்டார்களா? அல் லாஹ் மிக்க மன்னிபவனாக இருக்கின்றான்.( அல் மாயிதா 73-74)

நயவஞ்சகர்கள் நரகத்தின் அடிப்பாகத்தில் கிடப்பார்கள். அவர்களுக்கு யாரும் உதவ முடியாது. இப்பினும் அவர் களின் தமது பாவத்தை உணர்ந்து திருந்தி தவ்பாச் செய்தவர்களை, மனதால் திருந்தியவர்களை, அல்லாஹ் வின் வழியைப் பற்றிப்பிடித்தவர்களை, தமது மார்க்க த்தை அல்லாஹ்வுக்கு மட்டுமென ஆக்கியவர்களைத் தவிர.. இவர்கள் இறை விசுவாசிகளுடன் இருப்பார்கள். ( ஸூரா அந்நிஸாஃ 145,146)

## வஹ்ஸியை மன்னித்தவன் உன்னை மன்னிக்க மாட்டானா?

இதுவும் மனந்திருந்தி மாமனிதனான ஒரு பாவி மனி தனின் சம்பவம்.. படித்துப் பார்..

எண்ணிலடங்காத பல கொலைகளையும் கற்பழிப்புக் களையும் மற்றும் பல பாவச்செயல்களையும் புரிந்த ஒரு மனிதன்.

நபியவர்களின் அன்புக்குரியவரான பாசமிகு சிறிய தந் தையான ஹம்ஸா(றழி)யைப் பின்னால் பதுங்கியிருந்து குத்திக்கொண்றவர். கல்லுக்குள்ளும் ஈரம் இருக்கத் தானே செய்யும். நபியவர்களிடத்தில் இவர் இஸ்லாத் தை ஏற்கும் எண்ணத்தில் வந்தார். அப்போது அவர் இஸ்லாம் நல்லதுதான் ஆனால் நானோ பாவங்கள்பல புரிந்திருக்கின்றேன் பலரை அநியாயமகக் கொலை செய்துள்ளேன். பல பெண்களைக் கற்பழித்துள்ளோன். இந்தப் பாவங்களுக்கெல்லாம் மன்னிப்பு உண்டா? என்று கேட்டார். உடனே நபியவர்கள் பின்வரும் வசனத்தை ஓதிக் காட்டினார்கள்..

‘றஹ்மானின் நல்லடியார்கள் யாரெனில் அவர்கள் அல்லாஹ்வோடு வேறு எதையும் இணைகற்பிக்காது, அல்லாஹ் ஹராமாக்கிய உயிர்கள் எதையும் கொல் லாது, விபச்சாரமும் செய்யாதிருப்பார்கள். இவற்றை யார் செய்தார்களோ அவர்கள் அதற்கான தண்டனை யைப் பெறுவார்கள். இருப்பினும் அவர்களில் தவ்பாச் செய்து விசுவாசங்கொண்டு நல்லமல்களையும் புரிப வர்களைத் தவிர அல்லாஹ் இப்படியானவர்களின்

பாவச்செயல்களை நற்செயல்களாக மாற்றுவான். அல் லாஹ் மிக்க மன்னிப்பவனும் இரக்கமுள்ளவனு மாவான். ( ஸூரா புர்கான்..68 –70)

என்ற வசனத்தை ஓதிக் காட்டியதும்..

இதைக்கேட்ட வஹ்ஸி இதென்ன இவ்வளவு நிபந்த னைகள்? விசுவாசங்கொண்டு, தவ்பாச்செய்து நல்ல மல்களெல்லாம் செய்தால்தான் மன்னிப்பா? என்னால் அப்படிச்செய்ய முடியாவிட்டால் மன்னிப்புக் கிடைக் காதா? என்றார். அதற்கு நபியவர்கள் பின்வரும் வசன த்தை ஓதிக் காட்டினார்கள். ..
நிச்சயமாக அல்லாஹ் அவனுக்கு இணைவைக்கப் படுவதை மன்னிக்கவே மாட்டான்.அதல்லாதவற்றை தான் நாடியோருக்கு மன்னிப்பான்.என்ற வசனத்தைக்

கூறியதும் அதற்கு அவர் அல்லாஹ் தான் நாடியோருக் குத்தான் மன்னிப்பதாக சொல்கின்றான். அவன் என்னை மன்னிக்க விரும்பாவிட்டால் என்னசெய்வது என்று கேட் டார். அதற்குத்தான் நபியவர்கள் பின்வரும் வசனத்தை ஓதிக்காட்டினார்கள்..

۞ قُلْ يَـٰعِبَادِيَ ٱلَّذِينَ أَسْرَفُوا۟ عَلَىٰٓ أَنفُسِهِمْ لَا تَقْنَطُوا۟ مِن رَّحْمَةِ ٱللَّهِ ۚ إِنَّ ٱللَّهَ يَغْفِرُ ٱلذُّنُوبَ جَمِيعًا ۚ إِنَّهُۥ هُوَ ٱلْغَفُورُ ٱلرَّحِيمُ

“தமக்குத்தாதே அநியாயம் செய்து கொண்ட எனது அடியார்களே! அல்லாஹ்வின் றஹ்மத்தினை விட்டும் நீங்கள் நம்பிக்கையிழந்து நிராசையாகி விடாதீர்கள். நிச்சயதாக அல்லாஹ் அனைத்துப் பாவங்களையும் மன்னிப்பான். அவன் மிக்கமன்னிப்பவனும் கருனையாளனுமாய் இருக்கின்றான் . (ஸூரா ஸூமர் 53).

இதைக்கேட்ட வஹ்சி இதற்குப்பின் என்னால் எப்படித் திருந்தாது இருக்கமுடியும்? எனக்கூறி அவ்விடத்திலேயே கலிமாவை மொழிந்து இஸ்லாத்தில் தன்னையும் இனைணத்துத் கொண்டார்.(பைஹகி, தாரீகுல் கபீர்.)

எனவே நண்பா! இவ்வளவு பாவங்கள் செய்து விட்டோமே இதற்கு மன்னிப்புண்டா? என நீ கலங்கவும் கூடாது. அதேவேளை நாமென்ன பெரிதாகப் பாவம் செய்துவிட்டோம் என உன்பாவங்களைத் துச்சமாக மதித்துவிடவும் கூடாது. ஏனெனில் அதிகபாவம் செய்தவனாயிலும் அதற்காக வருந்தினால் அல்லாஹ் மன்னிப்பான். கொஞ்சம்பாவமே செய்திருப்பினும் இதெல்லாம் ஒருபாவமா? என துச்சமாக மதித்து தவ்பாச் செய்யாது நாளைக் கடத்துபவனை அல்லாஹ் கோபிக்கின்றான்.

எனவே இப்படிநினைப்பதே அல்லாஹ்வின் விசாலமாக கருனையின்மீது முழுமையான நம்பிக்கையின்மையினாலும் அவனது வல்லமை, அன்பு பற்றி சரியாக அறியாத

தாலும் அவன் மன்னிப்பானா? என்ற சந்தேகத்தாலும் தவ்பா எவ்வளவு சக்திமிக்கது என்பதைப் புரியாததாலும் ஏற்படுவதாகும்.

எனவே நீ பின்வரும் நான்கு இறைச்செய்திகளையும் சற்று உன்னிப்பாகக் கவனித்துப்பார்.

1- அல்லாஹ் சொல்கின்றான்...

" என் அருட்கொடை அனைத்து வஸ்த்துக்களையும் விட விசாலமானது." ( அல் அஃராப் 56)

2-அல்லாஹ் ஹதீஸ் குத்ஸியில் சொல்கின்றான்..

யார் நான் பாவங்களை நிச்சயம் மன்னிப்பேன் என

உறுதியாக நம்பியிருந்தாரோ அவரது பாவங்களை நான் மன்னிப்பேன். அவை எவ்வளவு அதிகமாயிருப்பினும் பொருட்படுத்த மாட்டேன். (ஸஹீஹுல் ஜாமிஉ 4330)

3- அல்லாஹ் கூறுகின்றான்..

"ஆதமின் மகனே! நீ எவ்வளவுதான் பாவங்கள் செய்திருந்தாலும் அதற்காக வருந்தி என்னிடம் பிரார்த்தித்து, நான் மன்னிப்பேன் என எதிர்பார்த்து இருப்பின் நான் அவற்றைப் பொருட்படுத்தாது மன்னித்து விடுவேன். ஆதமின் மகனே! உனது பாவச்சுமைகள் வானத்தின்

எல்லையை எட்டுமளவுக்கு அதிகமாயிருப்பினும் என்னிடம் இதற்காக நீ தவ்பாச் செய்தால் அவற்றையெல்லாம் பெரிதுபடுத்தாமல் நான் மன்னித்து விடுவேன். ஆதமின் மகனே! நீ இப்பூமியவுக்கு பாவங்கள் செய்துவிட்டு பின் என்னை சந்திக்கும்வேளை இணை-சிர்க் மட்டும் வைக்காமல் வந்தால் நான் இப்பூமியளவுக்கு மன்னிப்பை உனக்குத் தரக் காத்திருக்கின்றேன்.

( திர்மிதி ஸ ஜாமிஉ 4338)

4-பாவத்திலிருந்து மன்னிப்புத்தேடியவன் பாவமே செய்யாதவனைப் போன்றவனாவான். ( இப்னுமாஜா: ஸ ஜாமிஉ 3008 )

## நூறு பேரைக் கொலைசெய்த பாவிக்கும் மன்னிப்புண்டா?.

அபூஸஈத் அல்குத்ரி அவர்கள் நபியிவர்கள் சொன்னதாகக் கூறுகின்றார்கள்...

“முற்காலத்தில் ஒரு பாவி இருந்தான் அவன்99 பேரைக்கொலை செய்த பெரும்பாவி. இருப்பினும் அவன் மனந்திருந்தி வாழ விரும்பினான். எனவே தான் செய்த கொலைகளுக்கு பிராயச்சித்தம் உண்டா என அங்கிருந்த


இஸ்லாம்கல்வி.காம்
islamkalvi.com

ஒரு ஆபித்–வணக்கவாளியிடம் சென்று வினவினான். அதற்கவர் அடே பாவி! நீ செய்த கொலைகள் ஒன்றா ரெண்டா? 99 கொலைகளாச்சே! உனக்கு மன்னிப்பே கிடையாது என்று கூறிவிட ஆத்திரமடைந்த அவன் அவரையும் கொலைசெய்து நூறு கொலைகளாக்கினான். பின்னரும் அவன் மனம் உறுத்தவே மற்றொரு அறிஞ ரிடம் சென்று தன் பாவத்திற்கு மன் னிப்புண்டா? என்று வினவினான். அதற்கு அந்த அறிஞர் ஆம் உனக்கும் மன் னிப்புண்டு. உன் பாவத்துக்கும் இறைமன்னிப்புக்கும் இடையில் யார் தடையாக இருக்க முடியும்?. எனவே நீ தற்போது இருக்கும் ஊரை விட்டுப் புறப்படு!. அது பாவிகளின் ஊர். அங்கிருந்து இன்ன இடத்தில் இருக்கும் ஊருக்குச் சென்று அங்குள்ள நல்ல மக்களுடன் சேர்ந்து நீயும் வணக்கம்புரிந்து நல்லவனாக வாழ். என்று சொல்லிய னுப்பினார். அப்படியே அவன் ஊரைவிட்டுக் கிழம்பிய பாதி வழியில் வைத்தே மலக்குல் மவ்த் அவனிடன் வந்து இறை உத்தரவுப்படி அவனது உயிரைப் பறித்துவிட்டார். உடனே அவ்விடத்திற்கு சொர்க்கத்துக்குப் பொறுப்பான மலக்குகளும் நரகத் துக்குரிய மலக்குகளும் வருகைதந்து அவ்வுயிரை எடு த்துச் செல்வது யாா? என்று போட்டிபோட்டனர். இம்மனிதன் 100 பேரைக் கொலைசெய்தவன். எனவே இவனை நாம்தான் எடுத்துச்செல்வோம் என்று நரகத்

துக்குரிய மலக்குகளும் இல்லையில்லை இவன் தவ்பாச் செய்துவிட்டு திருந்திவாழ தன் ஊரையே விட்டுப் புறப் பட்டு வந்திருக்கின்றான். எனவே இவனது உயிரை நாமே கைப்பற்றுவோம் என சொர்க்கத்துக்குரிய மல க்குகளும் வாதிட்டனர். எனவே இதற்குத் தீர்ப்புச் சொல் வதற்காக அல்லாஹ் ஒருமலக்கை மனித வடிவில் அனு ப்பிவைத்தான். அவர் இவன் இறந்த இடத்திலிருந்து புறப்பட்டுவந்த ஊருக்கும் சேரவேண்டிய ஊருக்கும் இடையிலுள்ள தூரத்தை அளந்துபாருங்கள். கடந்து வந்த தூரம் அதிகமெனில் அவனை சொர்க்கத்துக்கும் கடக்கவேண்டியது அதிகமாயிருப்பின் நரகத்துக்கும் எடுத்துச் செல்லுங்கள் எனத் தீர்ப்ப ளித்தார். அவ்வாறே அளந்துபார்க்கப்பட்ட போது அவன் கடந்துவந்த தூரமே ஒரு சாணளவு அதிகமாயிருந்ததுஇதன் படி அவனை றஹ்மத்தக்குரிய மலக்குகளே கைப்பற்றி எடுத்துச் சென்றனர். .

முஸ்லிமின் அறிவிப்பின்படி அல்லாஹ் பூமிக்கு பூமியே! அவன் கடந்த தூரத்தை நீட்டுவாயாக. கடக்க வேண்டிய தூரத்தை சுருக்குவாயாக என்று கட்டளையிட்டான் என வும் இடம்பெற்றுள்ளது. (புகாரி, முஸ்லிம்.)

ஆம் சகோதரா! அல்லாஹ்வின் றஹ்மத்–அருளுக்கும் உனக்குமிடையில் தடைபோட யாருக்கும் அதிகாரம்

உண்டா? . இந்த மனிதன் செய்த நூறு கொலைகளைக் காட்டிலும் உன்பாவங்கள் அதிகமானதா?... அதையே மன்னித்த அந்த றஹ்மான் உன்னை ஏன் மன்னிக்க மாட்டான்?. எனவே தைரியமாக திருந்துவதற்கு முடிவுசெய். ஸைத்தானின் வீணான ஊசலாட்டங்க ளை— வீண் சந்தேகங்களைத் தூர வீசிவிடு. நீமட்டும் திருந்தி நல்லவனாக வாழ்வதென முடிவு செய்துவிட்டால் கடந்த கால பாவங்களுக்காக தவ்பாச்செய்து விட்டால் உன் பாவங்களை அல்லாஹ் மன்னிப்பது மாத்திரமல்ல.. உன் பாவச்செயல்களை அவன் நன்மையான காரியங்களாக மாற்றிடுவான் அந்த கருணைமிகுந்த வல்ல றப்பு. இது அவனின் வாக்குறுதி..

அவன் சொல்கின்றான்...

“தவ்பாச்செய்து பாவமன்னிப்புக்கோரி நம்பிக்கையுடன் நல்லமல் செய்தோருக்கு அவர்களின் தீமைகளை அல் லாஹ் நன்மைகளாக மாற்றிடுவான். (புர்கான்.70 )

மற்றுமொரு சம்பவத்தைக் கேள்..

“ஒருமுறை நபியவர்களிடத்தில் ஒரு கூன்விழுந்த கிழவர் வந்தார். தலையெல்லாம் நரைத்து பற்களெல்லாம் விழு

ந்துவிட்டன. கண்புருவங்கள் கூட பழுத்து விட்டன. நடக்கமுடியாமல் தடியில் ஊண்றியபடியே நபியவர்களிடத்தில் வந்தார். அல்லாஹ்வின் தூதரே! நான் சிறிதோ பெரிதோ எப்பாவத்தையும் செய்யாது விட்டதில்லை. நான் செய்த பாவங்களை இம்மண்ணில் வாழும் அனைவரும் சேர்ந்து செய்திருப்பினும் அனைவரும் பாவிகளாகி விடுவர் என்றார். நபியவர்கள் அவரைப் பார்த்து நீ முஸ்லிமா? என்று கேட்க ஆம்! வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் மாத்திரம் தான் என்று சாட்சி சொல்லியிருக்கின்றேன் என்றார். உடனே நபியவர்கள் இன்றிலிருந்து திருந்தி பாவங்களை விட்டுவிட்டு நல்லவற்றை மாத்திரமே செய்து வருவீராக. அல்லாஹ் உம் பாவங்களையும் நன்மைகளாக மாற்றிடுவான் என்றார்கள். ( தபரானி, பஸ்ஸார்)

சிலர் இப்படியும் கேட்கலாம்...

இதுகால வரைக்கும் நான் வழிகேட்டில் இருந்து விட்டேன். தொழவில்லை, நோன்பு நோற்கவில்லை. ஹராம்ஹலாலைப் பேணி நடக்கவில்லை. இப்படிப்பட்டவன் இஸ்லாத்தை விட்டு வெளியேறியவனாகவே கணிக்கப்படுவான் என்று நீங்கள் கூறுகின்றிர்கள். இருப்பினும் நான் சிலநல்ல காரியங்களையும் செய்துள்ளேன். இப்போது நான் தவ்பாச்செய்து திருந்தி

விட்டால் நான் பாவியாகவிருந்த காலத்தில் செய்த நல்லகாரியங்களால் எனக்கு ஏதேனும் நன்மை கிட்டுமா? அவற்றில் நிலை என்ன என்று கேட்கலாம்..

அதற்கான பதிலை இதோ நபியவர்கள் சொல்கின்றார்கள் கேட்டுக்கொள்..“ஹகீம் பின் கிஸாம் அவர்கள் முற்காலத்தில் சிலை வணக்கத்தில் மூழ்கிப்போயிருந்த

ஒரு நல்ல மனிதர். பல நல்ல காரியங்களையும் அவர் புரிந்திருந்தார். அவர் இஸ்லாத்தைத் தழுவும்போது அல்லாஹ்வின் தூதரே! முற்காலத்தில் நான் பல தான தர்மங்கள் நல்ல கருமங்களெல்லாம் செய்துள்ளேன். இவற்றின் நிலை என்ன என்று கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் “ நீ முன்னர் செய்த நல்லமல்களுடனேயே இஸ்லாத்தில் நுழைந்திருகின்றாய் என்றார்கள்.

( ஸஹீஹுல் புகாரி.)

மற்றுமொரு ஹதீஸைக் கேள் ...

நபியவர்களிடத்தில் ஒரு தோழர் வந்து அல்லாஹ்வின் தூதரே! நான் பாவியாகி விட்டேன் என்றார். ஏன்ன நடந்தது என்று விசாரித்தங்கு நான் தோட்டத்துக்குச் சென்றபோது ஒரு மங்கையைக் கண்டேன். அவளின் அழகு என்னை மதிமயக்கவே அவளைக் கட்டியணைத்து

முத்தமிட்டுவிட்டேன். உடலுறவு மட்டும் கொள்ளவில்லை இதற்கு என்ன தண்டனையோ அதை எனக்கு நிறைவேற்றுங்கள் என்று கூறினார். நபியவர்கள் அதற்கு எதுவும்கூறாது விட்டுவிட்டார்கள் அவரும் போய் விட்டார். அங்கிருந்த உமர்(றழி) அவர்கள் அம்மனிதர் அதைப்பற்றி உங்களிடம் சொல்லாது விட்டிருந்தால் அல்லாஹ்வும் மன்னித்திருப்பானே! என்று கூறினார்கள். நபியவர்கள் சற்றுநேரத்தின் பின்னர் அவரை அழைத்துவரச் சொன்னார்கள். அவர் திரும்பிவந்ததும்''பகலின் இருநேரத்திலும் இரவிலும் தொழுகையை நிறைவேற்றுவாயாக. நிச்சயமாக நற்செயல்கள் தீயவற்றைப் போக்கிவிடும்..

எனும் வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

இப்படி நீபுரியும் நல்லமல்கள்கூட அவ்வப்போது உன் பாவச்சுமைகளை அழித்துவிடுமளவுக்கு அல்லாஹ் உனக்கு கருனை புரிந்திருக்கின்றானே..இதை நீ நினைத்துப் பார்க்க வேண்டாமா? இதற்காக உன்னைப் படைத்த இறைவனுக்கு நன்றிசெலுத்த வேண்டாமா? அல்லாஹ் உன்னை மன்னிக்கக் காத்திருக்கின்றான். நீதான் தாமதிக்கின்றாய் விலகிப்போகின்றாய்..

## கெட்ட நண்பர்கள் என்னை விரட்டுவார்களே..

சிலசகோதரர்களுக்கு இப்படியொரு பிரச்சினை. அதாவது நான் திருந்திவாழத்தான் எண்ணுகின்றேன். இருப்பினும் என்நண்பர்களின் தொல்லைகளை நான் எப்படி சமாளிப்பேன்.. நாங்கள் ஒன்றாக சேர்ந்துதான் பாவ காரியங்களில் ஈடுபட்டிருந்தோம். திடீரென நான் மட்டும் இப்போது அவர்களிடமிருந்து விலகினால் என்னை அவர்கள் சீண்டுவார்கள்,கேலிசெய்வார்கள் ஏன்? சண்டைகூட போடுவார்கள் அவர்களை என்னால் எப்படி சமாளிக்க முடியும் என்பதே பிரச்சினை என்று நீ மட்டுமல்ல உன்னைப்போன்ற பலர் சொல்கின்றனர்.

நண்பா! இது அல்லாஹ் உனக்கு விட்ட சோதனை!. சைத்தானுக்கும் உனக்கும் இடையில் நடைபெறும் ஒரு பலப்பரீட்சை. இதில் வெல்வது நீயா? அவனா? என்பதைத் தீர்மானிக்கும் சோதனை நேரமிது. இப்படியான இக்கட்டான கட்டம் பலருக்கு ஏற்பட்டுள்ளது. அவ்வேளை சிலர் ஸைத்தானுக்கு முன்னால் தோற்றுப் போயினர். மற்றும்சிலரோ இத்தீய நண்பர்களின் திருப்தியை விட அல்லாஹ்வின் திருப்தியே பெரிதெனமுடிவு செய்து அவனிடத்தில் சரணாகதியடைந்தனர். இவர்கள் இன்று நன்றாகவே இருக்கின்றனர். அவர்கள்தான் மோசம் போய் விட்டனர். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதை முதலில் உறுதியாக நம்பு.


இஸ்லாம்கல்வி.காம்
islamkalvi.com

இந்த ஹதீஸையும் கேள்!.. முஆவியா(றழி)யவர்கள் அன்னை ஆயிஸா அவர்களிடம் முஃமின்களின் அன்னையே! ..எனக்கு அதிகம் நீட்டாமல் சுருக்கமாக வஸிய்யத் செய்யுங்கள் என்று கேட்டபோது‘ நபிகளார்

சொல்வதை நான் கேட்டிருக்கின்றேன். யார் அல்லா ஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக மக்களின் வெறுப் பைப் பொருட்படுத்த வில்லையோ அல்லாஹ் அம்மக் களையும் அவரைத் திருப்திப்படும்படி ஆக்கிவைப்பான். யார் அல்லாஹ்வின் வெறுப்பைப் பொருட்படுத்தாது மக்களின் திருப்தியே பெரிது என எண்ணுகின்றாரோ அந்த மக்களே அவரை பின்னர் வெறுக்கும்படி அல்லாஹ் செய்திடுவான் என்று சொன்னார்கள். (திர்மிதி)

எனவே உனக்கு அல்லாஹ்வின் திருப்தி வேண்டுமா ? அல்லது உன் தீய நண்பர்களின் திருப்பிதான் முக்கி யமா? என்பதை நீயே முடிவுசெய்து கொள்..

## நண்பனே பகைவனானால்..

சிலருக்கு இப்படியொரு பிரச்சினை. அதாவது ஒருசில திருந்தும் உள்ளங்களை கெடுத்து தடுத்து நிறுத்துவத ற்காக அவனது பழைய நண்பர்களே அவனுக்கு எதிராகி “ நீ எங்கள் அணியை விட்டுப் பிரிந்தால் நாம் ஒன்றாகச் சேர்ந்து செய்த மோசமான செயல்களையெல்லாம்

மக்களுக்குத் தெரியப்படுத்தி உன்னை சந்திசிரிக்க வைத்துவிடுவேன். உன் மானம் மரியாதையை கெடுத்து கப்பலேற்றிவிடுவேன். நீ செய்த தப்புக்களைப் பற்றி பொலிஸூக்குத் துப்புக்கொடுத்து உன்னை கம்பியெண்ணி கழிதின்ன வைப்பேன் என்றெல்லாம் மிரட்டக் கூடும்.

எனவே இந்தக் கட்டத்தில் நீ ரொம்பவும் மன உறுதியுடன் அல்லாஹ்வை முழுமையாகத் தவக்குல் வைத்து இருக்க வேண்டும். அல்லாஹ்வுக்காக நீ செய்யவிருக்கும் இந்தக் காரியத்துக்கு நிச்சயமாக அவனது உதவி உனக்கு முழுமையாகக் கிடைக்கும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை இருக்க வேண்டும்.

உன் முடிவில் நீ உறுதியாக இருந்தால் அல்லாஹ் நிச்சயம் உனக்கு உதவிடுவான். இத்தீயவர்களின் சூழ்ச்சிகளை அவன் தவிடுபொடியாக்கி விடுவான். சைத்தானின் துணைவர்களான இவர்களால் அல்லாஹ்வின் உதவி பெற்ற உன்னைத் தோற்கடிக்கவே முடியாது. அவன் தனது உதவியை உனக்குத் தந்து உன்னை ஸ்திரப்படுத்திடுவான்.

ஒரு தீயவர் திருந்தியவேளை அவருக்கு அல்லாஹ்வின் உதவி எப்படியெல்லாம் கிட்டியிருக்கின்றது என்பதற்கு பல சம்பவங்கள் இருக்கின்றன.

இந்தச் சம்பவத்தைக் கேள்!...

நபியவர்களின் காலத்தில் மக்காவில் முத்ரித் என்று ஒரு நபித்தோழர் இருந்தார். இவர் முன்னர் பெரும் பாவியாக இருந்தார். இவருக்கு இனாக் எனும் ஒரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பு இருந்தது. இப்பெண் கெட்ட நடத்தை யுள்ளவள், தான் விரும்பிய பலருடன் இரவைப் பகிர்ந்து கொள்வதே இவளது வாடிக்கை. முத்ரித் அவர்களின் தொழில் மக்காவிலுள்ள–காபிர்களால் தடுத்து வைக்க ப்பட்டிருக்கும் முஸ்லிம்கள் யாரேனும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்ல விரும்பினால் அவர்களை யாருக்கும் தெரியாமல் ரகசியமாக மதீனாவுக்கு கூட்டிச் சென்று விடுவதுதான். (பின்னாளில் இவர்கள் இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்கள்.)

அவர் சொல்கின்றார்..

இப்படித்தான் நான் ஒருநாள் ஒருவரை மதீனாவுக்குக் கடத்திச்சென்று விடுவதாக வாக்களித்திருந்தேன்.அன்றிரவு அவரைக் கூட்டிச் செல்வதற்காக அவர் வீட்டுப் பக்கம் சென்றேன்.அப்போது இனாக் என்ற அந்தப்பெண் என்னைக் கண்டுவிட்டாள். உடனே என்னிடம்வந்து இன்றிரவை என்னுடன் இன்பமாக அனுபவித்து விட்டுத்தான் இங்கிருந்து செல்லவேண்டும் என்று அடம்பிடித்தாள். நான் அவளிடம் நண்பியே! நான் இப்போது

முன்புபோல் இல்லை. முஸ்லிமாகி விட்டேன் எனக்கு அல்லாஹ் விபச்சாரத்தை ஹராமாக்கியிருக்கின்றான் என்றேன். உடனே அவள் நீ என்னு டன் வராவிட்டால் இப்போதே ஊரைக்கூட்டி நீதான் கைதிகளை மதீனா வுக்குக் கடத்திச் செல்பவன் என் று காட்டிக்கொடுத்து விடுவேன் என்று மிரட்ட ஆரம்பித்தாள். அதற்கு நான் மறுக்கவே இதோ முத்ரித் உங்களது கைதிகளைக் கடத் திச் செல்கின்றார் பிடியுங்கள் என்று கத்த ஆரம்பித்தாள். உடனே என்னை எட்டுப்பேர் கொண்ட ஒரு கூட்டம் துரத்த ஆரம்பித்தது. நான் ஓடிக்களைத்து முடியாமல் ஒரு மலைக்குகைக்குள் ஒழிந்துகொண்டேன்.ஆனால் அவ ர்களும் தேடிப்பிடித்து அங்கு வந்துசேரவே நான் அல் லாஹ்விடம் உதவிதேடினேன். பின் என்ன ஆச்சரியம் அவர்கள் எனக்கு முன்னாலே நடந்து சென்றார்கள் ஆனால் என்னைக் காணவில்லை. அல்லாஹ் அவர் களின் கண்களைக் குறுடாக்கிவிட்டான். பின்னர் அந்தக் கைதியைச் சுமந்துகொண்டு மதீனத்துக்கு சென்று சேர் ந்தேன்.அங்கு நபியவர்களிடம் நடந்ததைச் சொல்லி அல்லாஹ்வின் தூதரே! நான் அப்பெண்ணைத் திரும ணம்செய்யட்டுமா? என்று கூற அவர்கள் எதுவும்கூறாது அமைதியாக இருந்தார்கள். அப்போது தான் “ விபச் சாரியான ஆண் விபச்சாரப் பெண்ணை அல்லது முஸ்ரிக்- இணை வைப்பவளையோ அன்றி பிறரை

மணக்க மாட்டான். விபச்சாரப் பெண் விபச்சார ஆணை யோ அல்லது முஸ்ரினையோ அன்ற பிறரை மணக்க மாட்டாள். இவர்களை மணப்பது முஃமின்களுக்கு ஹராமாக்கப் பட்டுள்ளது”(ஸூராநூர்) எனும் வசனம் இறங்கியது.

பார்த்தாயா நண்பா! அல்லாஹ் தன்னை நாடி வருவோருக்கு எப்படியெல்லாம் பாதுகாப்பளிக்கின்றான். என்னென்ன உதவியெல்லாம் செய்கின்றான் என்று..

சரி..ஒரு பேச்சுக்கு நீ திருந்திவிட்டால் உன் கெட்ட தோழர்கள் உனது கடந்தகால குற்றங்களை பிறருக்கு அம்பலப்படுத்துவதாக மிரட்டினால் நீ தைரியமாக ஆம் நான் முன்பு மோசமானவனாக இருந்தேன், இப்போது திருந்திவிட்டேன் என்று தைரியமாகச் சொல். அதிலென்ன தப்பு. நீ திருந்திவிட்டால் மக்கள் உன்னைப்பற்றி எப்படி எண்ணினாலும் அல்லாஹ்விடத்தில் நீ புனிதமானவன். எனவே இன்று பேசிவிட்டு நாளை மாறு செய்யும் இந்த மக்களிடம் நீ நல்லவனாக இருக்க வேண்டுமா? அல்லது உனக்கு சுவனத்தைத் தரக் காத்திருக்கும் அல்லாஹ்விடத்தில் நீ நல்லவனாக இருக்கவேண்டுமா? சிந்தித்துப் பார்!.

உண்மையில் அவமானம் என்பது இரண்டுவகை. ஒன்று இவ்வுலகில் உன் தப்புக்கள் மக்களின் கண்ணுக்குத்

தெரிந்தால் அதனால் ஏற்படும் அவமானம். இது தற் காலியமானது. சிறிது காலத்தில் அதைப்பற்றி மக்கள் மறந்துவிட்டு வேறு விசயத்தில் மூழ்கிவிடுவார்கள். சிலவேளை நீ திருந்தியதன் பின் செய்த நல்ல காரிய ங்களுக்காக உன்னைத்தூற்றிய அதே நாவினாவேயே உன்னைப் போற்றவும் ஆரம்பித்துவிடுவார்கள்.

ஆனால் இன்னொரு நிரந்த அவமானமும் இருக்கின் றது. அதாவது மறுமையில் நீ பாவியாக எழுப்பப்பட்டு அனைவருக்கும் மத்தியில் நரகவாதியென தீர்ப்பளிக் கப்பட்டு மக்களும் மலக்குகளும் உன்னைச் சபித்துச் சாபமிட ஈவிரக்கமற்ற மலக்குளால் நரகத்துக்கு வில ங்கிடப்பட்டு இழுத்துச்செல்லப்படுவாயே! அன்று உன க்கு ஏற்படுகின்ற அவமானம். “இவனைப் பிடியுங்கள்! விலங்கிட்டு இழுத்துச் செல்லுங்கள்.! நரகத்தில் தள் ளுங்கள்! எழுபது முழ சங்கிலியால் பிணைத்து கட்டி ப்போட்டு வேதனை செய்யுங்கள் ! என்று சொல்லப்ப டுமே அன்று உனக்கு ஏற்படவிருக்கின்ற அவமானம்.

உலகில் சிலவேளை ஏற்படும் அவமானத்தை நீ சகித் துக்கொண்டால் மறுமையில் கிடைக்கவிருக்கும் இப் பெரிய அவமானத்திலிருந்து நீ தப்பித்துக் கொள்ள லாம்.

அல்லது இவ்வுலகில் உனக்கும் கிடைக்கும் வரட்டு கௌரவம்தான் பெரிதென்றால்–இச்சிறு அவமானத்தைத் தாங்கமுடியாதென்றால் மறுமையில் ஏற்படவிருக்கும் அந்த மிகப்பெரிய அவமானத்தை சந்திக்கவேண்டி இருக்கும், பரவாயில்லையா ? அதற்கு நீ தயாரா? .

இனி முடிவு உன் கையில் இருக்கின்றது..

## எங்கே நிம்மதி?.. எங்கே நிம்மதி?

நண்பா! உன்னைப் போன்று திருந்த நினைப்போர் பலர் இப்படியும் சொல்கின்றனர்.அதாவது நான் பாவங்கள் பல புரிந்து கெட்டவனாகவே வாழ்ந்து பழகிப் போய் விட்டேன். இப்போது ஏதோ நல்ல புத்தி வந்து திருந்தி வாழலாமென நினைக்கின்றேன். இருந்தாலும் என்மனம் கடந்தகாலத்தில் நான் புரிந்த பாவங்களை எண்ணி எண்ணி வெட்கப்படுகின்றது. மனதினுள் ஒரு வகை தாழ்வு மனப்பான்மை தோன்றுகின்றது. தூக்கம் வர மறுக்கின்றது. ஒரே யோசனையாக உள்ளது. இனி இறுதிவரை எப்படி நல்லவனாக வாழப்போகின்றோ மோ என்ற அவநம்பிக்கை தோன்றுகின்றது என முறை யிடுகின்றனர்.

நண்பா! உன் மனம் இப்படியெல்லாம் எண்ணுவதே நீ திருந்திவிட்டாய் என்பதற்கான அடையாளம். உன் தவ்பா பாவமன்னிப்பு அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டது என்பதற்கான அறிகுறி என்பதைத்தெரிந் திடுவாய். நீ இப்போது மனந்திருந்திவிட்டாய். கடந்த காலத்துக்காகக் கவலைப்படுகின்றாய்.எனவே அல்லா ஹ்வின் அருள் விசாலமானது என்பதை நினைத்துப் பார். அதைவிட்டும் நம்பிக்கையிழச்துவிடாதே! ஒரு முஃமினாகப்பட்டவன் அல்லாஹ்வைப்பற்றிய அச்சத்து டனும் அவனது அருளில் ஆதரவு வைத்தவனாகவும் வாழவேண்டும். அதுதான் முஃமினின் பண்பு. பாவத்தை

எண்ணிப்பார்க்கும்போது அல்லாஹ்வின் பயம் வர வேண்டும். செய்த பாவத்துக்காக வருந்தி தவ்பாச் செய்யும்போது அவனது அருளின் மீது நம்பிக்கை ஏற் பட வேண்டும்.

இப்னுமஸ்ஊத் (றழி) அவர்கள் சொல்வதைக்கேள்..

மிகப்பெரும் பாவங்கள் என்னவெனில் அல்லாஹ்வுக்கு இணைவைப்பதற்கு அடுத்ததாக அவனது தண்டனை யை அஞ்சாதிருப்பதும், அவனதுஅருள் கிடைக்காதெ ன்று நம்பிக்கையிழப்பதுமாகும்.

(முஸன்னப் அப்துர் ரஸ்ஸாக்.)

## நான்செய்த குற்றத்துக்கு தண்டனை பெற்றால்தான் மன்னிப்பு கிடைக்குமா ?.

சிலர் இப்படியெல்லாம் சிந்திக்கின்றனர்.அதாவது என க்குத் திருந்தி வாழ விருப்பம்தான். இருந்தாலும் என் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமானால் நான் நீதி மன்றத்துக்கோ , ஊர்த்தலைவரிடம் சென்றோ நான் செய்த குற்றங்களை விளக்கிக் கூறி ஒப்புக்கொண்டு


இஸ்லாம்கல்வி.காம்
islamkalvi.com

அவற்றுக்குத் தண்டனை பெற்றதன் பின்தான் பாவங்கள் மன்னிக்கப்படும் என்று பலர் எண்ணுகின்றனர். இதனால் தனது குடும்பத்தின் மானம் போய்விடக் கூடாது எனப்பயந்து இறுதிவரை திருந்தாமலேயே இருந்துவிடுகின்றனர். இது முற்றிலும் தவறாகும் . இது பற்றி நன்கு தெரிந்திருப்பது அவசியம்.

அன்பின் சகோதரனே! அருமை நண்பனே! தெரிந்து கொள்! நமது இஸ்லாமிய சன்மார்க்கத்தின் தனிச் சிறப்பே ஒரு அடியான் தனது றப்பு கடவுளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது தான் . ஏனைய மதங்களைப்போல் மனிதனை கடவுளுடன் தொடர்புபடுத்த இடைத்தரகர்களோ புரோகிதர்களோ நமது மார்க்கத்தில் கிடை யாது.

அல்லாஹ் சொல்கின்றான்..

“எனது அடியான் என்னைப்பற்றி (நபியே) உன்னிடம் விசாரித்தால் நான்(அவனுக்கு) மிக சமீபமாகவே இருக்கின்றேன். அழைப்பவன் என்னைக் கூப்பிட்டால் அதற்கு நான் பதிலளிக்கின்றேன், எனவே என்னையே அழைக்கவும் என்னையே நம்பியிருக்கவும்.( இப்படிச் செய்தால்) அவர்கள் நேர்வழிபெறுவார்கள்.”

எனவே அல்லாஹ்விடத்திலே பாவ மன்னிப்புக் கோர வேண்டுமெனில் அவனிடம்தான் பாவங்களை முறை யிட்டு ஒப்புக்கொள்ளவும் வேண்டும். வேறு எவரிடமும் உன் பாவப்பட்டியலை விபரித்து ஒப்புக்கொள்ள வேண் டிய அவசியமில்லை.

நபியவர்கள் கற்றுத்தந்த ஒரு துஆவில் கூட "எனது பாவங்களை உன்னிடமே முறையிட்டு ஒப்புக்கொள்கின் றேன் எனவே என்னை மன்னிப்பாயாக"என்று சொல்லி த் தருகின்றார்கள். (ஸய்யிதுல் இஸ்திக்பார்– புகாரி)

யூத கிருஸ்தவர்களிடம் இருக்கும் நடைமுறையைப் போல பாவம்புரிந்தவர் பாவங்களை பாதிரியாரிடம் முறையிட்டு ஒருதொகைப் பணத்தையும் கொடுத்தால் சரி அவர் பாவவிமோசனச் சீட்டை கடவுளிடமிருந்து?? பெற்றுத்தந்துவிடுவார். இது கடவுளையும் மனிதனை யும் ஏமாற்றும் செயலாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்..

"அவர்களுக்குத் தெரியாதா? நிச்சயமாக அல்லாஹ் தான் தன் அடியார்களிடமிருந்து தவ்பாவை ஒப்புக் கொள்கின்றான்..(ஸூரா தவ்பா 104 )

அதாவது எவ்வித இடைத்தரகர்களுமின்றி அவனாகவே தன் அடியார்களின் தவ்பாவை ஒப்புக்கொள்கின்றான்.

எனவே ஒருவன்செய்த குற்றங்களுக்கு தண்டனை கொடுக்கப்படுவது எப்போதென்றால் அக்குற்றச் செயல் நீதிபதியின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட்டால்தான். நீ பாவம் புரிந்தது உனக்கும் அல்லாஹ்வுக்கும் மாத்திரம்தான் தெரியுமென்றிருந்தால் அதை ஊருக்குச்சொல்லி உன்னை அவமானப்படுத்த வேண்டியதில்லை. மாறாக அல்லாஹ்விடம் சொல்லி மன்னிப்புத்தேடு.அல்லாஹ்அதை பிறருக்குத் தெரியாமல் மறைத்திருக்கையில் நீயாக அதை பிறரிடம் சொல்லி ஏன் தலைகுனிய வேண்டும்?. அல்லாஹ்வின் பெயர்களில் ஓன்று ஸித்தீர் அதாவது மனிதர்களின் தப்புக்களை மறைப்பவன். அவன் தப்புத்

தவறுகள் வீணாக பிறர் முன்னிலையில் வெளிப்படுத்தப்படாமல் மறைக்கப்படுவதை விரும்புகின்றான். எனவே நீ உன் தப்புக்களை யாரிடமும் சொல்லவேண்டியதில்லை. அல்லாஹ் மன்னிக்கும்போது வேறு யாரிடமும் சொல்ல வேண்டிய அவசியமுமில்லை.

இப்போது ஒரு கேள்வி எழலாம்...

அதாவது முன்னர் சொல்லப்பட்ட ஹதீஸ்களில் விபச்சாரம் செய்த மாயிஸ் எனும் நபித்தோழரும் காமிதிய்யாப்பெண்ணும் ஒரு பெண்ணை முத்தமிட்ட நபித் தோழரும் நபியவர்களிடம் தமது குற்றங்களை தாமாக வந்து

முறையிட்டு ஒப்புக்கொண்டு தண்டனை தருமாறு கோரினார்களே என்றுகேட்டால்.. அதற்கு பதில் அவர்கள் அவ்வாறு செய்திருக்க வேண்டிய அவசியமில்லை. தமக்கு கடமையில்லாத ஒன்றையே அவர்கள் செய்துள்ளனர். அதாவது அவர்களது உறுதியான ஈமானும், அல்லாஹ் வைப்பற்றிய அபரிமிதமான அச்சமும் அவர்களை அவ் வாறு செய்யத்தூண்டியது. உலகிலேயே தமது தப்புக்குத் தண்டனை பெற்றுக் கொண்டால் மறுமையில் எவ்வித தண்டனையும் கிடைக்காது என்று அவர்கள் நம்பியதால் மறுமையின் தண்டனையை விட உலகத்துத் தண்டனையை தமக்குத்தாமே தெரிவுசெய்து கொண்டார்கள். இருப்பினும் இவர்கள்செய்தது சரியென்றாலும் அப்படி முறையிடாமல் மறைப்பதே இதைவிடச் சிறந்தது. ஏனெனில் நபியவர்கள்கூட இவர்கள் தம் குற்றங்களை நபியவர்களிடம் எடுத்துக்கூறிய போது இப்படிச் செய்யாமல் திரும்பிச் சென்று தவ்பாச் செய்து கொள்ளட்டும் என்ற எண்ணத்தில் அவர்களைக் கண்டும் காணாதது போல் , கேட்டும் கேட்காதது போல் புறக்கணித்தார்கள். மற்ற சம்பவத்தின்போது பக்கத்திலிருந்த உமர் (றழி) அவர்கள் அல்லாஹ்வே இவரது குற்றங்களை மறைத்திருக்கும்போது இவரும் இதைச் சொல்லாமல் மறைத்திருக்கலாமே என்றதற்கு நபியவர்களும் அக்கருத்தை ஆமோதித்து மௌனம் சாதித்தார்கள்.

எனவே இவைகளிலிருந்து தெரியவருவது யாதெனில் ஒருவன் தான் செய்ய தப்புக்களிலிருந்து திருந்த விரும்பினால் அவை அவனுக்கும் அல்லாஹ்வுக்கும் மட்டுமே தெரியும் என்றிருந்தால்- அச்செய்தி நீதிபதியின் கவனத்துக்குச் செல்லவில்லையென்றிருந்தால் அதுபற்றி உரியவரோ, வேறுஒருவரோ நீதிமன்றத்துக்கோ ஊர்த் தலைவரிமோ,பள்ளிவாயல் இமாமிடமோ சென்று முறையிட்டு தண்டனைபெறவோ,பெற்றுக் கொடுக்கவோ வேண்டிய அவசியமில்லை. அல்லது தனக்குத் தெரிந்தவர் மூலம் தனக்குத்தானே ஹத்து கசையடியடிக்க வேண்டியதுமில்லை. மாறாக உளத்தூய்மையுடன் மனமுருகி அல்லாஹ்விடம் முறையிட்டுத் தவ்பாச் செய்து கொண்டால் போதுமானது அதுவே மிகச் சிறந் ததும் கூட..

இவ்விடத்தில் ஒருமுக்கிய விடயத்தை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதாவது சில மார்க்க விளக்கமற்ற நபர்கள் இஸ்லாமியசேவை செய்கின்றோம் என்று நினைத்துக் கொண்டு ஊரில் தப்பு செய்வோரை உபதேசம் மூலம் நயமாக எடுத்துக் கூறி திருத்துவதை விட்டுவிட்டு தெரியாத்தனமாக ஒருவர் எப்போதோ செய்த தப்பை மக்கள் மத்தியில் பரப்பி அவரை அவமானப்படுத்துகி

ன்றனர். மக்களின் குறைகளை குறிப்பாக தனக்கு வேண்டாதவர்களின் குறைகளை துருவித்துரவி ஆராய்கின்றனர். இதெல்லாம் மார்க்கத்தில் தடுக்கப்பட்டதாகும். நபியவர்கள் சொல்கின்றார்கள். யார் பிற சகோதரனின் குறைகளை துரவித்துரவி ஆராய்கின்றாரோ அல்லாஹ் அவரது குறைகளைத்துருவ ஆரம்பிப்பான். ஒருவரின் குறைகளை அல்லாஹ் தோண்ட ஆரம்பித்தால் அவர் நடுவீட்டுக்குள் இருக்கும் நிலையிலேயே அவரை மக்கள் சபையில் அவமானப்படுத்தி தலைகுனிய வைப்பான் என்றார்கள். ( திர்மிதி )

இவ்வாறே போதிய மார்க்க அறிவற்ற உலமாக்கள் சிலரும் பள்ளிவாயல் தர்மகர்த்தாக்கள் சிலரும் பாவத்தை ஒப்புக்கொண்டு திருந்திவாழும் எண்ணத்துடன் தம்மிடம் வரும் மனிதர்களுக்கு தேவையற்ற சிரமங்களை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் அவர்களது குற்றங்களை எடுத்துச்சொல்லி அவர்கள் மீண்டும் தன் பழைய நிலைக்கே செல்ல காரணமாகின்றனர். உதாரணமாக தம்மிடம் வந்த குற்றங்களை முறையிடுபவர்களிடம் நீ காதி நீதிமன்றத்துக்குச் சென்று இவற்றை ஒப்புக்கொண்டு தண்டனை பெறவேண்டும் அப்போது தான் பாவம் மன்னிக்கப்படும் என்று கூறுகின்றனர். அல்லது அவர்களாகவே இவருக்கு மக்கள் முன்னிலையில் தண்டனை நிறைவேற்றுகின்றனர். இது இவர்களின் அறிவீன

மாகும். இப்படிச் செய்வதற்கு இவர்களுக்கு அதிகாரமும் இல்லை. எனவே இத்தவறு இம்மனிதனோடு மட்டும் சம்பந்தப்பட்டிருந்தால், பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு செய்யாவிட்டால் அதை நீதி மன்றத்துக்கு முன் வைக் கவோ அல்லது ஊர்த்தலைவர் தண்டனை கொடுக்கவோ வேண்டியதில்லை. அவ் வாறு செய்யக் கூடாது. மாறாக அவனிடம் நல்ல முறையில் எடுத்துச்சொல்லி தவ்பா ச்செய்ய வைத்து அவனது குற்றத்தைமறைத்து அவன் திருந்தி வாழ வழிகாட்ட வேண்டும். அக்குற்றத்தால் வேறு யாராவது பாதிக்கப்பட்டிருந்தால்–அவர் அதுபற்றி முறைப்பாடும் செய்திருந்தாலேயே அதைவிசாரிக்கவோ அல்லது அதற்கு தனக்கு அதிகாரமில்லாவிடில் அவ்விடயத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவோ வேண் டும். இதுவே இஸ்லாமிய வழிகாட்டலாகும்.

இதற்கு மாற்றமாக திருந்த நினைத்த சிலர் மஸ்ஜித் முஅத்தினிடமோ இமாமிடமோ சொல்ல அவர்கள் சட்ட த்தைக் கையிலெடுத்துக் கொண்டு அவருக்கு ஹத்து கசையடி கொடுத்து அவனது விடயத்தை ஊரறியச் செய்து சந்தி சிரிக்கச் செய்த சம்பவங்கள் நிறையவே நடந்துள்ளன.

அல்லாஹ் கூறுகின்றான்..

“உங்களுக்குத்தெரியாவிட்டால் அறிவாளிகளிடம் கேட் டறியுங்கள்.( நஹ்ல் : 43)

அல்லாஹ் அளவற்ற அருளாளன். அதைப்பற்றி நன்கு தெரிந்தவர்களிடம் கேட்டுத்தெரியுங்கள்.(புர்கான்: 59)

எனவே தொழுகை நடத்தும் அனைவருமே மார்க்கம் பேச தகுதியானவர்களல்ல. மார்க்கம்பேசும் அனைவருமே மார்க்கத் தீர்ப்பளிக்க தகுதியானவர்களல்ல. ஊர்த்தலைவர் என்பதால் எல்லா விடயங்களுக்கும் தீர்ப் பளிக்கும் அதிகாரம் அவருக்கில்லை. எனவேபொது மக்கள் யாரிடம் எதைப்பற்றிக் கேட்க வேண்டும் என்று தெரியாவிட்டால் ஆலோசித்தே கேட்க வேண்டும். பொறுப்புதாரிகளும் தங்கள் சட்ட வரம்புக்கு அதிகா ரத்துக்கு உட்பட்ட விடயங்களிலேயே தலையிட வேண்டும். எல்லா விடயத்திலும் புகுந்து விளையா டுவேன் என்ற எண்ணத்தில் சட்டத்தைக் கையிலெடுத்து தான்தோன்றித்தனமாகத் தீர்ப்பளித்து கெட்டவனை இன்னும் மகா கெட்டவனாக்கும் காரியங்க ளில் ஈடுபடக் கூடாது.

## திருந்திவாழ முடிவுசெய்தோருக்கு ஏற்படும் சில ஐயங்களுக்கான தெளிவுகள்.

வினா1:

நான் முன்னர் ஒருபாவத்தில் ஈடுபட்டு வந்தேன். பின்னர் அதைஉணர்ந்து அதிலிருந்து விடுபட்டு தவ்பாச்செய்து திருந்தி வாழ்ந்தேன். ஆனால் சிறிது காலத்தின் பின் ஒருதடவை சைத்தானுக்கு கட்டுப்பட்டு மீண்டும் அப் பாவத்தைச் செய்துவிட்டேன். இத்தடவை நான் பாவம் செய்ததால் நான் முதலில் செய்திருந்த தவ்பாவின் நிலை என்ன? தவ்பாவுக்கு முன் செய்த பாவங்கள் மன்னிப்பட்டனவா? அல்லது மறுதடவை அத்தவறை நான் செய்ததால் அத்தவ்பா வீணாகி விட் டதா?

பதில்: உலமாக்களின் முடிவின்படி தவ்பா ஏற்றுக்கொள் ளப்படுவதற்கான நிபந்தனைகளில் மீண்டும் அத்தப்பை ச்செய்வதில்லை என்ற உறுதியான எண்ணத்துடன் தவ்பாச்செய்ய வேண்டும். ஆனால் தெரிந்தோ தெரி யாமலோ மீண்டும் அத்தப்பில் ஈடுபட்டு விட்டால் இதனால் முதல் செய்த தவ்பா மறுக்கப்பட்டு விட்டது என்பது அர்த்தமல்ல. மாறாக அதற்கு முன் செய்த பாவங்கள் அத்தவ்பாவால் மன்னிக்கப்பட்டு விடும். இரண்டாவதாக செய்த தப்புக்காக வருந்தி மீண்டும் தவ்பாச் செய்ய வேண்டும்.

சுருங்கக்கூறினால் தவ்பாச் செய்யும்வேளை இனிமேல் அப் பாவத்தை செய்வதில்லை என்ற உறுதி இருக்க வேண்டும்.ஏதோ காரணத்தால் திரும்பவும் அதில் ஈடு பட்டால் அதனால் முதல் தவ்பா பாத்திலாகாது. மாறாக தவ்பாச் செய்யம்போதே மீண்டும் அப்பாவத்தில் ஈடுபடும் எண்ணத்துடன் செய்தால் அந்த தவ்பாதான் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

## வினா2:

என்னிடம் இரண்டு கெட்ட பழக்கங்கள் இரு க்கின்றன.இவ்விரு பழக்கங்களுமே பாவகாரியங்களென எனக்குத் தெரியும். இருப்பினும் அவை இரண்டையும்

என்னால் ஒரேயடியாக விட முடியவில்லை. அதனால் அவற்றில் ஒன்றை விடாதிருக்கும் நிலையில் மற் றதைவிட்டுவிட்டு அதிலிருந்து தவ்பாச் செய்து மீழ விரும்புகின்றேன். இப்படிச் செய்யலாமா?

விடை: ஒருவர் செய்யும் பலதரப்பட்ட பாவங்கள் ஒரே வகை பாவத்தைச் சேர்ந்ததாக இருக்காவிட்டால் அவற்றில் ஒன்றை செய்யும் நிலையிலேயே மற்றையதி லிருந்து தவ்பாச் செய்தால் அத்தவ்பாக் கூடும். இதற்கு மாற்றமாக அவ்விரு பாவ காரியங்களும் ஓரே பாவத்தின் பல வடிவங்களாக இருந்தால் அதில் ஒன்றைச் செய்யும் நிலையிலேயே மற்றதை விட்டும் தவ்பாச் செய்ய முடியாது. உதாரணமாக ஒருவரிடம் மதுப்பழக்கமும் வட்டிக்கு வாங்கும் பழக்கமும் உண்டு. இப்போது மதுப்பழக்கத்திலிருந்து தவ்பாச் செய்யாத நிலையிலே யே வட்டியை விட்டும் தவ்பாச் செய்தால் அத்தவ்பா ஆகுமானது. இதனால் அவர் மதுவருந்துவது ஆகும் என்றுஆகிவிடாது. இரு பாவங்களில் ஒன்றை விட்டு விட்டார் என்பதே உண்மை. இதற்கு மாற்றமாக ஒருவரிடம் வட்டிக்கு கொடுக்கும் பழக்கமும் வாங்கும் பழக்கமும் உண்டு . இதில் ஒன்றை மட்டும் விட்டுவிட்டு தவ்பாச் செய்ய முடியாது காரணம் இரண்டுமே ஒரே பிரிவைச்சேர்ந்த பல்வேறு வடிவங்களேயாகும். இவ் வாறே வட்டியோடு சம்பந்தப்பட்ட வங்கியில் கடனுதவி

பெறுவதுடன் அவ்வங்கியில் நகைகளை அடகுவைத்து வட்டிக்குப் பணம் பெறல், வட்டுக்கு பணம் கொடுப்ப துடன் வட்டிக்கு பொருள்களை விற்றல் போன்றவற்றில் ஒன்றை செய்து கொண்டு மற்றதுக்காக தவ்பாச் செய்ய முடியாது. இவ்வாறே இரு பெண்களுடன் தப்பான தொடர்புள்ள ஒருவர் ஒருத்தியுடன் தொடர்பிருக்கும் நிலையில் அடுத்ததிலிருந்து தவ்பாச் செய்ய முடியாது ஏனெனில் இதில் ஆள்தான்வேறு.. பாவம் ஒன்றே. இது போன்றே சிகரட் பழக்கமும் கஞ்சா பழக்கமும் உடையவர் அல்லது சிகரட்டும் சுறுட்டும் பாவிப்பவர் அதில் ஒன் றைச் செய்துகொண்டே மற்றதை விட்டு நீங்கி தவ்பாச் செய்யமுடியாது. மாறாக இரண்டையும் ஒரே தட வையில் விடவேண்டும். ஏனெனில் அவை ஒரே வகை பாவமான போதைப்பழக்கத்தின் பல வடிவங்களே..

( பார்க்க: மதாரிஜுஸ் ஸாலிகீன்.)

வினா3:

நான் கடந்தகாலங்களில் தொழுகை நோன்பு, ஜக்காத் போன்ற பல அல்லாஹ்வுக்கு செய்யவேண்டிய கடமைக ளைச்செய்யவில்லை. இப்போது அதற்காக வருந்தி தவ் பாச்செய்து திருந்தி வாழ விரும்புகின்றேன். இப்போது நான் என்ன செய்ய வேண்டும்.



இஸ்லாம்கல்வி.காம்
islamkalvi.com

விடை: இதில் பல தவறுகள் சுட்டிக்காட்டப் படுகின்றன. தொழுகையை வேண்டுமென்று விட்டவனைப் பொறுத்த வரைக்கும் மிகச்சரியாக கருத்தின்படி அவன் காபிராவான். (எமக்கும்அவர்களுக்கும்– காபிர்களுக்கும் இடையிலுள்ள ஒப்பந்தமே–வேறுபாடே தொழுகைதான் அதை விட்டவன் காபிராவான் என்பது நபிமொழி. எனவே அதற்காக தவ்பாச்செய்து கலிமாச் சொல்லி அன்றிலிருந்து தொழ ஆரம்பிக்க வேண்டும். கடந்த காலங்களில் அவனுக்கு விடுபட்ட தொழுகைகளைக் கழாச்செய்ய வேண்டியதில்லை.ஏனெனில் தொழுகையை விட்டவன் காபிராகிவிட்டதால் அவன் தவ்பாச் செய்யும் போது புதிதாக இஸ்லாத்தை தழுவியவனாகவே கருதப்படுகின்றான்.

விடுபட்ட நோன்புகளைப் பொறுத்தவரை முஸ்லிமான பருவமடைந்த புத்தியுள்ள சக்தியுள்ள நிலையில் அவன் நோன்பை காரணமின்றி விட்டால் அவர் அந்த நோன்புகளைக் கணக்கிட்டு நோற்பதுடன் ஒவ்வொரு நோன்புக்கும் ஒரு ஏழைக்கு அரைக்கொத்து– அரைப்படி தானியம் என்ற விகிதத்தில் உணவும் கொடுக்க வேண்டும். நோய், பயணம் போன்ற தக்க காரணத்துக்காக நோன்பை விட்டிருப்பின் அவர் அவற்றை கழா மாத்திரம் செய்ய வேண்டும் ஏழைக்கு உணவளிக்க வேண்டியதில்லை.

வேண்டுமென்றே விட்ட நோன்புகளுக்காகவும் தவ்பாச் செய்தால் போதும் கழாவேண்டியதில்லை என்றும் சிலர் சொல்கின்றனர்.

ஸக்காத்தைப் பொறுத்தவரையில் அதில் அல்லாஹ் வுக்குரிய ஹக்கும் இருக்கின்றது. ஏழைகளுக்குரிய ஹக்கும் இருக்கின்றது. எனவே இதுபற்றி விரிவாக மதாரிஜுஸ் ஸாலிகீன் 1-383 பார்வையிடவும்.

வினா4:

நான் பிற மனிதர்களின் தனிப்பட்ட விடயங்களில் தவறு செய்திருக்கின்றேன்.(ஹக்குல்ஆதமி) இப்போது நான் செய்யவேண்டியது என்ன?

விடை: இதில் என்ன செய்யவேண்டுமென்பதற்கு பின் வரும் நபியவர்களின் ஹதீஸே போதுமானது.

நபியவர்கள் கூறுகின்றார்கள்...

"முப்லிஸ்-வங்குரோத்து காரன் என்றால் யாரென்று உங்களுக் குத் தெரியுமா? என நபியவர்கள் ஒருதடவை தம் தோழர்களைக்கேட்க அதற்கவர்கள் யாரிடம் பணமோ பொருளோ எதுவுமில்லையோ அப்படியான கடன்பட்டவனையே ஓட்டாண்டி யென்றுசொல்வோம் என்றார்கள். அதற்கு நபியவர்கள் அதுவல்ல நான்

மறுமையின் ஓட்டாண்டியைக் கேட்டேன். நாளை மறுமையில் ஒருவன் விசாரணையின் போது தொழுகை, நோன்பு, ஸதகா, என பல நல்லமல்களைச் சுமந்து வருவான். ஆனால் அவன் உலகில் ஒருவனை ஏசியிருப் பான். இவனுக்கு அடித்திருப்பான்.அவனின் பொருளை ஹராமாகச் சாப்பிட்டிருப்பான்.ஒருவனின் இரத்தத்தை அநியாயமாக ஓட்டியிருப்பான். மற்றொருவனை அவதூ றாகப் பேசியி ருப்பான். எனவே அநீதியிழைக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் அந்தந்த குற்றத்துக்குத் தக்கபடி இவனது நன்மைகளிலிருந்து எடுத்து பங்குவைக்கப்ப டும். இவனது அனைத்து நல்லறங்களுமே இப்படியே பங்கு வைக்கப்பட்டு தீர்ந்துவிடும். ஆனால் இன்னும் இவன் செய்த அநீதிகள் மீதமிருப்பதால் அநீதியிழை க்கப்பட்டவர்களது தீமைகளை எடுத்து இவன் மீது சும த்தப்ப ட்டு இறுதியில் இவனை இழுத்துச் செல்லப்பட்டு நரகில் தள்ளப்படும் என்றார்கள்.(ஸஹீஹ் முஸ்லிம் )

மற்றொரு ஹதீஸில் “ யாரேனும் தனது மற்றொரு சகோதரனுக்கு அநியாயம் செய்திருப்பின் காசோ, பொருளோ பயனளிக்காத அந்த மறுமைநாளைக்குமுன் னரே அவற்றிலிருந்து தன்னை விடுவித்துக் கொள் ளட்டும். அப்படிச் செய்யாவிடில் அந்நாளில் உன்னிடம் நன்மையிருப்பின் அவற்றைப் பிடுங்கி அவர்களுக்குக்

கொடுக்கப்படும்.இல்லையேல் அவர்களது பாவச்சுமை களை உன் மீது சுமத்தி நரகத்தில் தள்ளப்படும்.

( ஸஹீஹுல் புகாரி)

எனவே அன்னிய சகோதர்களுக்கு அவர்கள் முஸ்லிமோ காபிரோ அவர்களின் பொருள் விடயத்தில் நீ அநியா யம் செய்திருப்பின் ஒன்று அதைத் திருப்பி ஒப் படைத்து விடு. அல்லது அவர்களிடம் அதை எடுத்துக் கூறி அதை மன்னித்து ஹலால் சொல்லிவிடுமாறு கேள். அப்படி மன்னித்து விட்டால் சரி. இல்லையேல் அவர்களிடம் எப்படியாவது அதை தவணை முறையிலாவது ஒப்ப டைத்தே ஆகவேண்டும்.

வினா5:

நான் முன்னர் பலரைப்பற்றியும் புறம் அவதூறு,கோள் சொல்லல்,அவமானப்படுத்தல் போன்ற மானம் சம்பந் தப்பட்ட பாவங்கள் புரிந்துள்ளேன். இப்போது அவற்று க்காக தவ்பாச் செய்து திருந்தி வாழ விரும்புகின்றேன். இப்போது நான் யாரைப்பற்றி அவதூறு,புறம் பேசினேனோ அவர்களிடம் அதுபற்றி எடுத்துச் சொல்

லி மன்னிப்புக் கேட்க வேண்டுமா?

விடை: இவ்விடயத்தியத்தைப் பொறுத்தமட்டில் இதனால் ஏற்படும் சாதகபாதகங்களை ஒப்பிட்டுப் பார்த்தே முடிவுசெய்யப்பட்ட வேண்டும். அதாவது நீ அவர்களிடம் இதுபற்றி சுருக்கமாக சிலேடையாகச் சொன்னால் உதாரணமாக “உங்களைப்பற்றி நான் தவறாகப் பேசியருக்கின்றேன் மன்னித்துக்கொள் ளுங் கள்” என்று சொன்னாலேயே அதைப்பற்றி தோண்டித் துருவாமல் சரியென்று சொல்பவராயின் அப்படிச் செய் துகொள். நீ அவரிடம் இப்படிச் சொன்னால் அவர் தோண்டித்துரவி விசாரிப்பார். நீ அப்படிச் சொன்னால் கோபப்பட்டு ஆத்திரப்பட்டு குமுறுவார் வேதனையடைவார் என்றிருந்தால் அதனால் உனக்கு நன்மைஏற் படுவதற்குப் பதிலாக தீமைதான் ஏற்படும். ஆதலால் நீஅதுபற்றி அவரிடம் எதுவும் சொல்லவேண்டியதில் லை. ஏனெனில் இஸ்லாம் பிரச்சினையைப் பெரிது படுத்த விரும்புவதில்லை. எனவே நீ பின்வரும் விடயங்களைத் செய்தாக வேண்டும்.

1–இப்படியொரு குற்றத்தைச் செய்ததற்காக வருந்தி அல்லாஹ்விடம் மனமுருகி மன்னிப்புக் கேட்க வேண்டும்..

2– நீ யாரிடம் புறம்பேசினாயோ அவரிடம் சென்று நான் இன்னாரைப் பற்றி உன்னிடம் கூறியது பொய் அல்லது

சரியல்ல! அது பாவம் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும்.

3- நீ அவரைப்பற்றி யார் யாரிடம் தவறாகப் பேசினாயோ அவர்களிடம் இவரைப்பற்றி புகழ்ந்தும் பேச வேண்டும்.

4-அவருக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தித்து பிழை பொறுக்கத் தேடவேண்டும். நீ அவருக்காக செய்த இந்த நல்லகாரியம் அவர்விடயத்தில் நீசெய்த தப்புக்குக் கணக்குத் தீர்க்கக்கூடியதாக இருக்கலாமே அதற்காக த்தான்.

பார் நண்பா! மற்றவரின் பொருள், மானம் விடயத்தில் நீ தவறு செய்வது எவ்வளவு பெரிய சிக்கலை உனக்குத் தோற்றுவிக்கின்றது.அல்லாஹ்வுடையவிடயத்தில் நீ பாவம்செய்தால்கூட தவ்பாச் செய்தால் அது மன்னிக்க ப்பட்டு விடுகின்றது. ஆனால் மனிதனுக்கு நீ செய்யும் அநியாயத்தை அவன் மன்னிக்காத வரை அல்லாஹ்வும் மன்னிக்க மாட்டான் என்பதை மனதில் நிறுத்தி செயற்படுவாயாக..

வினா:6.

ஒரு மனிதனை அநியாயமாக யாருக்கும் தெரியாமல் கொலை செய்த குற்றத்திற்கு எப்படி பரிகாரம் செய் வது?

விடை:வேண்டுமென்று ஒரு உயிரைக் கொலை செய்த வன் மூன்று கோணங்களில் தவறு செய்தவனாகின் றான்..

1-அல்லாஹ்வின் சட்டவரம்பை மீறியவனாகின்றான்.
2- கொல்லப்பட்டவனுக்குஅநீதியிழைத்தவனாகின்றான்
3-கொலையுண்டவனின் குடும்பத்திற்கு அநியாயம்செய் தவனாகின்றான்.

அல்லாஹ்வின் ஹக்கு அதாவது அவனது சட்ட வர ம்பை மீறியதற்காக அவனிடம் மனமுருகி பாவமன்னிப்புக் கோரினால் அவன் மன்னிக்கப் போதுமானவன்.

கொலையுண்டவனின் குடும்பத்தாரின் ஹக்கைப் பொ றுத்தமட்டடில் அவர்களிடம் நீ சென்று இவ்விடயத் தைக் கூற வேண்டும். அதற்காக உன்னை பதிலுக்கு பழிக்குப் பழி வாங்குவதா,அல்லது உன்னிடமிருந்து நட்டஈட்டைப் பெற்றுக்கொண்டு மன்னித்து விடுவதா, அல்லது எதுவும் பெறாமல் மன்னிப்பதா என்பதை தீர்மானிக்கும் உரிமை அவர்களிடமே இருக்கின்றது.

நீசெய்த கொலை தவறுதலாகநடந்திருப்பின் பதிலுக் கு உன்னைக்கொல்லமுடியாது. மாறாக ஒன்று உன் னிடமிருந்து நட்டஈட்டைப் பெற்றுக்கொண்டோ அல் லது அல்லாஹ்வுக்காகவோ அவர்கள் உன்னை மன் னிக்கவேண்டும். இதுவும் நீதிபதியின் முன்னிலையில் அவரது தீர்ப்பின்பிரகாரம் அமுல்ப்படுத்தப்பட வேண் டும்.யாரும் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

அடுத்து கொலையுண்டவனுக்கு செய்யப்பட வேண்டிய ஹக்கு பாக்கியிருக்கின்றது. இதைப்பொறுத்த வரைக் கும் அவன் உயிரோடு இல்லாததால் அவனுக்கு தான் செய்த அநியாயத்தை மன்னிக்குமாறு அல்லாஹ்விடமே மனமுருகி துஆக்கேட்க வேண்டியுள்ளது. இதனால் அல்லாஹ் அவன் சார்பாக அப்பாவத்தை மன்னித்து விட்டு அநியாயம் செய்யப்பட்டவனுக்கு அதற்குப் பதி லாக அநீதிக்குத் தக்கவாறு தன்புறத்திலிருந்து நன் மைகளைக் கொடுக்கப்போதுமானவன் என்று உலமா க்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

வினா7:

திருட்டுக்குற்றம் புரிந்த ஒருவர் இப்போது தனதுதவறை உணர்ந்து திருந்தி வாழ விரும்புகின்றார். இப்போது இவர் என்ன செய்ய வேண்டும்?.

விடை: அவன் திருடிய பொருட்கள் அவன் கைவவசம் இருந்தால் அவற்றை உடனடியாக உரியவரிடம் ஒப்ப டைக்கவேண்டும். அப்பொருள் இல்லையென்றால் அல் லது முழுமையாக இல்லையெனில் ஏதாவது ஒரு வகை யில் அப்பொருளின் பெறுமதியை பணமாகவோ பொரு ளாகவோ உரியவரிடம் ஒப்படைக்க வேண்டும். அதற்கும் முடியாவிட்டால் நேரடியாகவோ வேறொருவர் மூலமோ உரியவரைச் சந்தித்து விடயத்தை எடுத்துச் சொல்லி அதற்காக உலகிலேயே மன்னிப்புத் தேடிக்கொள்ள வேண்டும். அவர் இறந்திருப்பின் அவரது உறவுக்கார ர்கள் அவரது இடத்தில்வைத்து நோக்கப்படுவர். உரிமை யாளர் யாரெனத்தெரியாவிடில் அல்லாஹ்விடம் மனமுருருகி மன்னிப்புக் கேட்டுவிட்டு அதன் பெறும தியை நன்மையைஎதிர்பார்க்காமல் ஏழை எளியோ ருக்குத் தானம்செய்துவிட வேண்டும். அதன் நன் மையை அல்லாஹ் உரியவருக்குக்கொடுப்பதன் மூலம் திருடி யவரை அதிலிருந்து விடுவிக்கலாம்.

வினா8:

நான் முன்னர் பலரது பொருட்களைத் திருடித் தின்றி ருக்கின்றேன். அல்லாஹ்வின்அருளால் இப்போது திரு ந்தி வாழ்கின்றேன். இப்போது அவர்களைக் காணும் போது வெட்கப்படுகின்றேன். நான்தான் திருடன் என்று அவர்களுக்குக் தெரியாது. அவர்களிடம் வெளிப்படை

யாக நான்தான் திருடினேன் என்று சொல்லவோ அதற்காக மன்னிப்புக்கேட்கவோ வெட்கமாக உள்ளது. இந்நிலையில் நான் என்ன செய்வது?.

விடை: அதிலிருந்து நீ உலகிலேயே விடுதலையாவதற்காக வெட்கத்தைப் பொருட்படுத்தாமல் சற்று முயற்சியெடுப்பது ஒன்றும் பெரிய விடயமல்ல. இருப்பினும் அதற்குத் பல வழிகள் உள்ளன.எனவே வேறொருவர் வசம் அப்பொருளை–அல்லது, அதன் பெறுமதியை கொடுத்தனுப்பி இது உங்களுக்கு ஒருவர் தரவேண்டிய ஹக்கு. உம்மிடமிருந்து திருடப்பட்டது அல்லது தெரியாமல் தவறுதலாக ஒருவரால் எடுக்கபபட்டது. இப்போது அவர் திருந்திவிட்டார். அவர்யார் என்று சொல்ல விரும்பவில்லை என்றுகூறி அதை ஒப்படைத்து விடலாம். யாரென்றுசொல் என்று அவர் வற்புறுத்த முடியாது. அல்லது தபால்மூலம் அப்பொருளை பெயர்குறி

ப்பிடாமல் விபரத்தைச்சொல்லி அனுப்பி வைக்கலாம்.

வினா9:

நான் எனது தந்தையின் சட்டைப்பையிலிருந்து திருட்டுத்தனமாக பணத்தை எடுத்து செலவுசெய்திருக்கின்றேன். இப்போது அவற்றையெல்லாம்விட்டு திருந்தி வாழ விரும்புகின்றேன். எவ்வளவு பணம் திருடியிருப்

பேன் என் று சரியாகத் தெரியாது. இந்நிலையில் நான் என்ன செய்ய வேண்டும்.

விடை : நீ குத்துமதிப்பாக எவ்வளவு திருடியிருப்பாய் என்று கணக்கிட்டு அனுமானித்து அதன் அடிப்படையில் அதை நேரடியாகவோ மேலே சொன்ன முறைகளின் படியோ உன்தந்தையிடம் ஒப்படைக்க வேண்டும்.

வினா10:

நான் வேலைசெய்யும் நிறுவனத்திலிருந்து பல தடவை கள் பணம்-பொருளை திருட்டுத்தனமாகவும் பொய்யாக கணக்குக்காட்டியும் எடுத்துள்ளேன். இப்போது அந்த நிறுவனம் இல்லை. அல்லது அதிலிருந்து நான் விடுவு பெற்று நாடுதிரும்பி விட்டேன் . இப்போது நான் என்ன செய்வது?.

விடை: நீ நாடு திடும்பியிருப்பின் அந்த நிறவனத்தின் முகவரி உன்னிடம் இருக்கும்தானே.அதற்கு அப்பண த்தை தபாலிலோ அல்லது ஒருவர் மூலமோ சேர்த்து விடு. அந்த நிறுவனமே இப்போது இல்லையெனில் அதன் உரிமையாளரைப் பற்றி விசாரித்து அவரிமோ அவரது குடும்பத்தினரிடமோ அவற்றை ஒப்படைத்து விடு. அப்படித் தேடிப்பார்த்தும் கண்டுபிடிக்க முடியா விட்டால் அப்பணத்தை ஏழைகளுக்கு நன்மையை எதிர்பார்க்காமல் தானமாக வழங்கிவிட்டு அந்த ஸதகாவின் நன்மையை உரியவருக்கு சேர்த்துவிடுமாறு

இறைவனிடம் மன்னிப்புக்கோரிப் பிரார்த்தித்து தவ் பாச்செய் அல்லாஹ் அவ்வாறே செய்யப் போதுமான வன்.

இதுபோன்ற ஒரு சம்பவத்தை இமாம் இப்னு கையூம் அவர்கள் இப்படிக் குறிப்பிடுகின்றார்கள்..

“இஸ்லாமியப் போருக்காகச் சென்றிருந்த படைவீரர்க ளில் ஒருவர் கனீமத்தாகப் பெற்ற பொருட்களில் சிலதை பங்குவைக்கப்படுவதற்கு முன்பாகத் திருடி விட்டார். சிலகாலம் கழித்து தமது தப்பை உணர்ந்து அதற்காகத் தவ்பாச்செய்தார். இப்போது இப் பொருளை எப்படி உரிவரிடம் சேர்ப்பது? யுத்தத்தில் கலந்து கொண்ட வீரர்கள் பிரிந்து சென்றுவிட்டார்கள். அமீரும் இப்போது இல்லை. என்னசெய்வது என்று யோசித்துவிட்டு ஹஜ்ஜாஜ் அஷ்ஷாயிர் என்ற அறிஞரிடம் பத்வாக் கேட்க அவர்கள் உனக்குத்தான் தளபதி யார்? வீரர்கள் எங்குள்ளனர் என்று தெரியாது அல்லாஹ்வுக்கு அவர்க ளின் பெயர்கள் ஊர் எல்லாம் தெரியும்தானே! எனவே ஐந்திலொன்றை பைத்துல் மாலில் ஒப்படைத்துவிட்டு மீதி யை யுத்தத்தில் கலந்து கொண்டோரின் பெயரில் ஸதகாச் செய்துவிடு. அல்லாஹ் அதன் நன்மையை அவர்களுக்கு சேர்க்கவும் உன்னை அதிலிருந்து விடுவிக் கவும் போதுமானவன் என்று பத்வாக் கொடுத்தார்கள்.

பின்பு இச்செய்தியைக் கேள்விப்பட்ட முஆவியா(றழி) அவர்கள் என்னிடத்தில் இந்த பத்வா வந்திருந்தாலும் இப்படித்தான் தீர்ப்பளித்திருப்பேன். இத்தீர்ப்பை நான் வழங்கியிருந்தால் எனது சொத்தில் பாதியளவு மேலும் கிடைத்தால் படும் சந்தோசத்தை விட அதிகம் சந்தோ சப்பட்டிருப்பேன் என்றார்கள். (மதாரிஜுஸ் ஸாலிகீன் 1- 388)

வினா11:

நான் அநாதை விடுதியில் கணக்காளராக இருந்தேன். அனாதைகளுக்குரிய பணத்தில் ஒரு பகுதியைக் கையா டல்செய்து அதை முதலீடாக வைத்து வியாபாரம் செய்து நிறைய சம்பாதித்தேன். இப்போது அத்தப்பை உணர்ந் து திருந்தி வாழ விரும்புகின்றேன். எனக்கு ஏதேனும் வழியண்டா?...

விடை: இவ்விடயத்தில் அறிஞர்கள் பல்வேறு தீர்வு களைக் கூறியுள்ளனர்.அவற்றுள் மிகச் சிறந்ததும் நடு நிலையானதுமான தீர்ப்பு யாதெனில் நீ திருட்டுத்தன மாக எடுத்த சொத்தின் அளவையும் அதை வைத்து வியாபாரம் செய்து பெற்றலாபத்தில் பாதியையும் உரிய அனாதைகளுக்கோ அனாதை இல்லத்துக்கோ திருப்பிக் கொடுத்துவிடு. இப்போது அவர்களின் மூலதனத்தில அவர்களுடன் கூட்டுவியாபாரம் செய்ததைப் போல் இது

ஆகின்றது. உனக்கு நீபட்ட சிரமத்துக்காக லாபத்தில் பாதி ஹலாலாகின்றது. இப்படித்தான் இமாம் அஹ்மது, இப்னுதைமியா, இப் னுல் கையும் போன்ற அறிஞர்கள் தீர்ப்பளித்துள்ள னர். பார்க்க : மதாரிஜ் 1 – 392

இவ்வாறே பிறர் சொத்திலிருந்து அவருக்குத் தெரி யாமல் எடுத்து அதன்மூலம் வியாபாரமோ,கால்நடைப் பண்ணையோ, ஹலாலான எந்தமுறையில் பொருளீட்டி னாலும் அசல் பணத்தையும் லாபத்தில் பாதியையும் உரியவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

வினா13:
நான் வங்கியில் எனது கணக்கில் உள்ள பணத்திற்காக கிடைக்கும் வட்டிப்பணத்தை சாப்பிட்டிருக்கின்றேன். இப்போது அத்தவறை உணர்கின்றேன் இந்நிலையில் நான் செய்ய வேண்டியது என்ன?
விடை: இந்தநேரத்தில் அப்பணம் உன்கைவசம் இருந் தால் அது உனக்கு ஹலாலல்ல. இல்லாவிட்டால் வட்டி யை சாப்பிட்ட குற்றத்துக்காக அல்லாஹ்விடம் மனமு ருகி தவ்பா பாவமன்னிப்புக் கேள். வட்டி மிகப் பொல் லாதது.அல்லாஹ் வட்டிக்காரர்களை தன்னுடன் போர் செய்யத்தயாரனவர்கள் என்று கடுமையாகச் சாடுகி ன்றான்.

வினா 14: என்னிடம் ஒரு வாகனம், சொத்து இருக்கின்றது. அதை வாங்கிய பணத்தில் ஒரு பகுதி எனக்குரியது மறுபகுதி ஹராமான வழியில் பெற்றது. இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?.

விடை: ஒருவன் மேற்சொன்னவாறு ஒரு பொருளை வாங்கியிருந்தால் அதனைப் பிரிக்க முடியுமாக இருப்பின் ஹராமான பணத்தின் வீதத்துக்கேட்ப தனியாகப் பிரித்து வேறுபடுத்த வேண்டும். வீடு வாகனம் போன்ற பிரிக்க முடியாத பொருளாயின் அதில் ஹராத்துடைய விகிதத்துக்கேற்ப உன் பணத்திலிருந்து வேறுபடுத்தி விட்டு அது குறிப்பிட்ட ஒருவருக்கு சொந்தமாயின் மேலே சொல்லப்பட்ட விபரத்தின் படி உரியவரிடமோ உறவினரிடமோ ஒப்படைக்கப்படவேண்டும். அது முடியாதபட்சத்தில் அப்பணத்தை அவர் பெயரில் ஸதகாக் செய்து விட வேண்டும்.

வினா15: நான் கடையில் வியாபாரம் செய்கின்றேன். அதில் சிகரட் பீடி, சிலை ,சாமி போட்டோ, பான்பராக்கு லாட்டரி டிக்கட், சினிமாபட சீடி இவை போன்ற ஹராமான பொருள்களையும் விற்கின்றேன். இப்போது நான் இஸ்லாமிய முறைப்படி வியாபாரம் செய்ய விரும்புகின்றேன்.நான் என்னசெய்ய வேண்டும்?

விடை: யார் இவ்வாறான ஹராமான பொருட்களை அவற்றை விற்பது மார்க்கத்தில் கூடாது என்பதைத் தெரிந்து கொண்டே இவ்வாறான வியாபாரத்தில் ஈடுபடுகின்றார்களோ அவர்கள் பெரும் பாவிகள். அவர் கள் விற்ற பொருட்களின் மூலம் யார்யார் என்னென்ன பாவங்களில் ஈடுபடுகின்றார்களோ, வேறு என்ன பாவ ங்களுக்கெல்லாம் இவரின் அவ்வியாபாரம் காரணமாக இருந்ததோ அத்தனை பேருக்கும் கிடைக்கும் பாவத்தின் அளவு இவருக்கும் கிடைக்கும்."யார் தீயதின் பக்கம் ஒருவருக்கு வழிகாட்டுகின்றாரோ அவர் செய்த தீங்கின் அளவுக்கு தண்டனை இவருக்கும் கிடைக்கும்" என்பது நபிமொழியாகும்.

எனவே இவ்வாறு வியாபாரம் செய்தவர் முதலில் அதை உடனடியாக நிறுத்தவேண்டும். அதன்பின் அல்லாஹ் விடத்தில் மன்றாடி அதற்காகப் பாவமன்னிப்புக் கேட்க வேண்டும். அவ்வாறே ஹராமானதை விற்று பெற்ற லாபமும் ஹராமானதாகும். எனவே அவற்றின் மூலம் பெற்ற லாபத்தைக் கணக்கிட வேண்டும். அவற்றை ஸதகாவாக கூடகொடுக்க முடியாது. ஏனெனில் அது சுத்தமான பணமல்ல. அல்லாஹ் பரிசுத்தமாகதைத் தவிர வேறு எதையும் ஏற்றுக்கொள்ளமாட்டான். எனவே நன்மையை எதிர்பாராமல் அதை அப்படியே யாரு க்காவது கஸ்டப்படுவோருக்கு கொடுத்துவிட வேண்டும்.

யாஅல்லாஹ் எங்களுக்கு ஹலாலானதை போதுமை யானளவுக்கு தருவாயாக. என்செல்வத்தில் ஹராத்தைக் கலந்துவிடாதே. உன்னை வழிபட்டு வாழவும் மாறு செய்யாமல் இருக்கவும் உன்னையன்றி வேறு எவரிட த்திலும் கேட்காமல் வாழவும் எங்களுக்கு அருள் புரி வாயாக.

எனவே ஹராமானமுறையில் தொழில்செய்தவர்களைப் பொறுத்த வரைக்கும் பின்வருமாறு செய்யவேண்டும்..

1-அத்தொழிலில் ஈடுபட்டகாலத்தில் அவர் முஸ்லிமல் லாதவராக இருந்திருப்பின் இப்போது அதை விட்டு விட்டு தவ்பாச் செய்து கொள்வது போதுமையாகும். தான் காபிராயிருந்த காலத்தில் ஹராமாக சம்பாதி த்ததை திரும்ப உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய தில்லை. ஏனெனில் அன்று ஸஹாபாக்கள் இஸ்லாத்தை ஏற்றபோது நபியவர்கள் அவர்களது ஹராமாக சம் பாதித்த பொருள்களை திரும்ப ஒப்படைக்குமாறு கட்ட ளையிடவில்லை.

2- அவன் அவற்றை முஸ்லிமாயிருந்த காலத்திலேயே சம்பாதித்திருப்பின் தான் செய்யும் தொழில் ஹராமா னது என்று அறியாத நிலையில் செய்திருந்தால் அறி ந்தபின் உடனடியாயக அதை விட்டுவிட்டு தவ்பாச் செய்துகொண்டால் போதுமானது.

3- தான் செய்யும் தொழில் ஹராமானது என்று தனக்கு நன்றாகத் தெரிந்திருந்து அத்தொழிலில் அவன் ஈடு பட்டிருந்தால் தன்னிமுள்ள ஹராமான முறையில் சம்பா தித்து லாபமாகப்பெற்ற பொருட்களை அவன் வைத்தி ருக்கக்கூடாது. ஒன்று உரியவரிடம் ஒப்படைத்து விட வேண்டும் அல்லது கஸ்டப்படுவோருக்கு நன்மை எதிர்பாராது கொடுத்துவிட வேண்டும்.

வினா16: ஒருவர் முக்கிய பொறுப்பில் உத்தியோகம் பார்த்தவர். தன்னிடம் வரும் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக லஞ்சம்-கப்பம்-கையூட்டு பெற்றிருக்கின்றார். இப்போது தன் தவறை உணர்ந்து திருந்திவாழ எண்ணுகின்றார். இவர் என்ன செய்ய வேண்டும்.

விடை: லஞ்சம்வாங்குவது மட்டுமல்ல! லஞ்சம் கொடு ப்பதுகூட குற்றந்தான். இருப்பினும் லஞ்சம்கொடுத்தவர் பலவீனனனாக இருப்பின் அதாவது தனக்கு கிடைக்க வேண்டிய ஹக்கை — உரிமையை அதிகாரி தர மறுப் பதனால்-லஞ்சம் கொடுத்தால்தான் அவர் தனது வேலை யை முடித்துக் கொடுப்பார் என்றிருந்தால்- அதை முடிப் பதற்கு இதைத்தவிர வேறுவழியும் இல்லை யென்றி ருந்தால் லஞ்சம் கொடுத்தவன் மீது குற்றமில்லை. காரணம் இவன் விரும்பிக் கொடுக்கவில்லை மாறாக

அவன் நிர்ப்பந்திக்கப் படுகின்றான். லஞ்சம் பெற்றவனைப் பொறுத்த வரைக்கும் அவன் ஒருவரிடம் அநியாயமாக அப்பணத்தைப் பெற்றிருப்பதால் அதை உரியவரிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டும்.

இவர் லஞ்சம் பெற்றது இவரைப் போன்று தவறான முறையில் ஊழல் செய்து சுறுட்டும் ஒருவரிடமிருந்து என்றிருந்தால் தவறான முறையில் தனக்குரியது அல்லாத ஒன்றைப் பெறுவதற்காகவே கொடுக்கப்பட்டிருந்தால் அந்த லஞ்சப் பணத்தை அவரிடம் திருப்பி ஒப்படைக்கக் கூடாது. ஏனெனில் அப்பணம் கூட அவருக்குச் சேர வேண்டியதல்ல. தவறான முறையில் காரியம் சாதிப்பதற்காக கொடுக்கப்பட்டது. அந்தக் காரியமும் சாதிக்கப்பட்டு விட்டது. எனவே அப்பணத்தை நன்மையை எதிர்பார்க்காமல் யாருக்கேனும் தேவையுள்ள ஏழை எளியோருக்குக் கொடுத்துவிட வேண்டும்.

வினா17:

நான் ஹராமான சில வேலைகளைச் செய்து கொடுத்து அதன்மூலம் பணம் சம்பாதித்திருக்கின்றேன் இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?.

பதில்: ஹராமான காரியங்களை முடித்துக்கொடுத்து, அல்லது அதற்கு உதவிசெய்து பெற்றபணத்தை ஒருவர்

தவ்பாச் செய்ததும் ஏழை எழியோருக்குக் கொடுத்து விடவேண்டும். அதை உரியவரிடம் ஒப்படைக்கக் கூடாது. உதாரணமாக விபச்சாரத் தொழில்செய்த பெண் திருந்தினால் அதன் மூலம் பெற்ற பணத்தை உரியவரிடம் கொடுக்கமுடியாது. அவ்வாறே பாடகர்கள் பாடகிகள் இசைக்கருவி வாசிப்போர் சிகரட்,மதுபானம் போதைப் பொருள் விற்போர், அப்படிப்பட்ட இடத்தில் வேலை செய்வோர்,பணத்துக்காக பொய்ச்சாட்சி சொன்னோர், இவைபோன்ற ஏனைய ஹராமான வற்றைச் செய்தோர் அதற்கு உடந்தையாக இருத்தோர் அனைவருமே திருந்தினால் அதன்மூலம் பெற்றவற்றை உரியவரிடம் திரும்பக் கொடுக்கக்கூடாது. மாறாக ஏழை எளியோருக்கு நன்மையை எதிர்பார்க்காது கொடுத்து விட வேண்டும்.

இதையே முதிய உலமாக்களான இப்னுதைமியா, இப் னுல்கையூம் போன்றோரும் சரிகண்டிருக்கின்றார்கள். பார்க்க: மதாரிஜ் 1-390.

வினா: நான் பண்ணிய தப்பு ஒன்று என் இதயத்தை இப்போது கசக்கிப்பிழிந்து கொண்டிருக்கின்றது. என் நிம்மதி பறிபோய்விட்டது. அதாவது நான் ஒரு பெண் ணுடன் வைத்திருந்த கல்லூரி நட்பின் விளைவாக நாமிருவரும் ஒரு கட்டத்தில் விபச்சாரத்தில் ஈடுபட்டு

விட்டோம். இது எங்கள் இருவரைத்தவிர யாருக்கும் தெரியாது. இதற்குப் பிராயச்சித்தமாக நான் அவளை யே திருமணம் செய்யலாமா என்று யோசிக்கின்றேன். உங்களது பதிலை எதிர்பார்க்கின்றேன்..

மற்றொரு வினா:18: நான் ஒரு பெண்ணுடன் விபச் சாரத்தில் ஈடுபட்டு விட்டேன். அவள் இப்போது என் மூலம் கர்ப்பமாக இருக்கின்றாள். அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கு நான் தகப்பனாவேனா? அவளுக்கும் குழந் தைக்கும் செலவு செய்வது எனக்குக் கடமையா? விளக்கம் தரவும்..

பதில்: சமூகத்தில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன. இதற்குக்காரணம் இஸ்லாம் காட்டிய வழி முறைகளை மீறியதுதான். எனவே உலமாக்களுக்கும் ஊர்ப் பிரமுகர்களுக்கும் சமூகத்தில் நடக்கும் இவ்விட யங்களை பரிசீலனைசெய்து- கவனம் எடுத்து இதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அவர்களு க்கு உள்ளது. குர்ஆன் ஸுன்னாவின் வழிமுறையில் மக்களை நல்வழிப்படுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக இஸ்லாமிய சட்டங்களான ஹிஜாப் அணிதல், தேவை யின்றி பெண்கள் வெளியில் நடமாடாதிருத்தல் போன்ற வற்றை கட்டாயம் அமுல்ப்படுத்த வேண்டும். அவ்வாறே பெண்கள் தனியாக வெளியே செல்லல், அன்னிய

ஆண்களுடன் பழகுதல், இருபால் கலப்பு கல்விமுறை, வைபவங்களில் ஆண்-பெண் ஒரு வரையொருவர் பார்க்கும் பேசும் வகையிலான ஏற்பா டு, பெண் தனியாக பயணம்செய்தல், ஆண்களுடன் சேர்ந்து அலுவலகங் களிலும் கடைகளிலும் நிறுவனங்களிலும் பெண்கள் பணிசெய்தல், வானொலி தொலைக்காட்சி நிகழ்சிகளில் தேவையின்றி ஆண்-பெண் தொலைபேசி உரையாடல் கள் செய்தல், மோசமான தொலைக்காட்சி சனல்களை வீட்டில் வைத்திருத்தல், வயதுக்கு வந்த பிள்ளைகளுக்கு திருமணம் செய்து கொடுக்காது காலதாமதம்செய்தல், வரதட்சனை, சீர் வரிசைபெறல் போன்ற பல்வேறு காரணங்களே இவ்வாறான பெரியதப்புக்கள் நடப்பதற்கு அடிப்படைக்காரணங்களாக இருக்கின்றன. எனவே உலமாக்களும் ஊர் முக்கியஸ்தர்களும் இவ்விடயத்தில் உடனடி கவனம் எடுத்து இவ்வாறான விடயங்களை முற்றாகத் தடை செய்வதுடன் மக்களுக்கு குறிப்பாக பெற்றோருக்கு இதுபற்றிய விழிப்புணர்வையும் ஏற்ப டுத்த வேண்டும். ஒவ்வொரு வீட்டின்சூழலும் இஸ்லாமிய சூழலாக மாற வழிசெய்ய வேண்டும்.

இப்போது கேள்விக்கு வருவோம்.. இதற்கான பதில் யாதெனில் ஒருவன் அன்னிய பெண்ணுடன் அவளை பலாத்காரம் செய்து அல்லது மிரட்டி அவளோடு விப ச்சாரம் செய்திருப்பின் அவள்மீது எவ்விதக் குற்றமு

மில்லை. எனவே அவன் திருந்தி தவ்பாச்செய்வதோடு அவளை சேதப்படுத்தியதற்காக நடுவர்களின் தீர்ப்புப் படி அவளது குடும்பப் பெண்களுக்கு கொடுக்கப்படும் மஹர்த் தொகையளவு நட்டஈடு கொடுக்கவேண்டும். இவனாகவே காழியிடம்சென்று விடயத்தைச் சொல்லி தண்டனை பெற வேண்டிய அவசியமமில்லை. எனினும் அப்பெண்தரப்பிலிந்தோ, அல்லதுவேறொருவர் மூலமோ விடயம் நீதிமன்றத்துக்குத் தெரியவந்தால் அதற்குரிய நிர்ணயிக்கப்பட்ட தண்டனையை பெற்றாக வேண்டும். ஏற்கனெவே திருமணம் முடித்து உறவு கொண்டவனா யிருப்பின் அவனை கல்லெறிந்து கொல்ல வேண்டும். முடிக்காதவனாயின் அவனுக்கு 100 கசையடிகளுடன் 1 வருடம் ஊரைவிட்டும் வெளியேற்றி வைக்க வேண்டும்.

அவன் அப்பெண்ணுடன் அவளது சம்மதத்துடனேயே விபச்சாரத்தில் ஈடுபட்டால் அவ்விருவரும் தவ்பாச்செய்து மீழவேண்டும். இவ்விடயம் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டால் மேற்படி தண்டனை இருவருக்கும் வழங்கப்படும். அவ்விருவரும் சம்மதித்தது அல்லது அவர்களின் குடும்பத்தவர் சம்மதத்துடன் அவர்களைத் தவ்பாச் செய்யவைத்து அவ்விடயத்தை யாருக்கும் தெரியாமல் மூடிமறைத்து விட்டால் அதுவே நல்லது. அந்நிலையில் வேறு எவரும் சம்மந்தமில்லாமல் அதில் தலையிட்டு பிரச்சனையை உருவாக்கக் கூடாது. இவ்விட

யத்தை மூடி மறைப்பதற்காக அவன் அவளையே திரு மணம் செய்ய வேண்டுமென்பது கட்டாயமில்லை.

அவ்வாறே ஒரு பெண்ணை-அவளது வயிற்றில் இவனா லோ வேறு ஒருவனாலோ உருவான கரு இருக்கும் நிலை யில் யாருக்கும் திருமணம் செய்துவைக்கக் கூடாது. அதேபோல் ஒருபெண் தவறாக நடந்துவிட்டால் அத னால் அவள் கர்ப்பம் தரிக்கவில்லையென தெளிவாகத் தெரியும்வரை- அதாவது அவளுக்கு மறுமுறை மாத விலக்கு வரும்வரை திருமணம் முடித்துக் கொடுக்கக் கூடாது. அவ்வாறே ஒருபெண் கர்ப்பமுற்ற நிலையிலோ அல்லது கர்ப்பமா இல்லையா என்று சந்தேகிக்கும் நிலையிலோ- அது உறுதியாகத் தெரியும்வரை திரு மணம் செய்து வைக்கப்படக் கூடாது.

அவ்வாறே ஒருவனோடு செய்த விபச்சாரத்தின் மூலம் ஒருபெண் குழந்தைபெற்றால் அக்குழந்தைக்கு தகப்பன் அவனல்ல. அதற்கு தாய் மட்டும்தான் உண்டு. எனவே அதற்குரிய செலவோ அவளுக்கான செலவுக்கோ இவன் பொறுப்பல்ல. அவளை சேதப்படுத்தியதற்கான நட்டஈடு மாத்திரமே அவளுக்குக் கிடைக்கும். அதன் அளவை காழியோ- மத்தியஸ்த்தர்களோ தீர்மானிப்பர். அவனுக் குரிய தண்டனை முறையே நிறைவேற்றப்படும். பெண்

தன் சுயவிருப்பத்துடன் ஈடுபட்டிருப்பின் அவளுக்கும் தண்டணை வழங்கப்படும். நட்டஈடும் கிடையாது.

விபச்சாரம்செய்த இவ்விருவரும் இந்நிகழ்வு ஒரு விபத் தாயின்–அதாவது இவ்விருவரும் வழக்கமாக இப்படியாக பலருடனும் சேரும் பழக்கம் இல்லாதவர்களாயின் எதிர்பாராதவிதமாக நடந்துவிட்ட சம்பவமாயின் உண் மையான முறையில் அவ்விருவரும் தவ்பாச் செய்தால் அதன்பின் எவ்வித, யாருடைய வற்புறுத்தலுதின்றி இரு வரும் மனதாற திருமணம்செய்து கொள்ளச் சம்மதி த்தால் அவர்களுக்கு திருமணம்செய்து வைக்கலாம்.

வினா19:

முன்னர் நான் நட்பாகப் பழகிய ஒரு பெண்ணுடன் ஒருகட்டத்தில் விபச்சாரத்தில் ஈடுபட்டுவிட்டேன். இப் போது நாம் கணவன்மனைவியாக குடும்பம் நடத்துகி ன்றோம். ஆனால் இஸ்லாமிய முறைப்படி திருமணம் செய்யவில்லை. இப்போது நாம் என்னசெய்ய வேண் டும்?.

பதில்: இவ்விடயத்தை வேறுஎவருக்கும் நீங்கள் தெரி யப்படுத்த வேண்டியதில்லை. இருவரும் மனமுருகி நட ந்த தப்புக்காக தவ்பாச்விட்டு காழியிடம் சென்று முறை

யாகத் திருமணம்செய்து கொள்ளுங்கள். முறையாகத் திருமணம் செய்வதற்கு முன் நீங்கள் நடத்திய வாழ்க்கை விபச்சாரமாகவே கருதப்படும். அதனால் பிறந்த குழந் தைகளுக்கும் இஸ்லாமிய முறைப்படி தகப்பன்–பிள்ளை உறவுமுறை கிடையாது.

வினா20:

ஒரு பெண் சொல்கின்றாள்..

நான் திருமணம்செய்து கொள்வதற்கு முன்பு பல தப் புக்களைச் செய்திருக்கின்றேன்.இப்போது ஒரு நல்ல ஸாலிஹான கணவரை அல்லாஹ் எனக்குத் தந்திருக் கின்றான்.அவர் என்னை அதிகம் நேசிக்கின்றார். இரு ப்பினும் எனது கடந்தகால வாழ்க்கைபற்றி என் கண வருக்குத் தெரியவந்தால் என்னநடக்குமோ, அதைச் சொல்லாமல் மறைப்பது அவருக்குச் செய்யும் துரோக மாகுமோ என்று எனக்குப் பயமாக உள்ளது. உள் மனது உறுத்துகின்றது. இப்போது நான் என்ன செய்ய வேண் டும்.

விடை: கணவனோ மனைவியோ யாராகிலும் திருமண த்துக்கு முன்னர் நடந்த கெட்ட விடயங்களை அவற்றை விட்டும் தவ்பாச்செய்து திருந்திவிட்டால் அல்லாஹ்வே அவற்றை யாருக்கும் தெரியாமல் மறைத்திருக்கும்போது

அதை வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இவ்வாறு செய்வது வீணான பல பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும். கணவன் – தான் மணக்கும்பெண் சுத்த மானவள் பத் தினியானவள் எனநினைத்து திருமணம் செய்து பின்னர் அவளது தவறான தொடர்புகள் தப்புக் கள் தெரியவந்தால் அவள் ஏற்கனவே கெட்டுப்போன வள் என்று தெரிந்தால் அவளுக்குகொடுத்த மஹரைக் கூடத் திரும்பப் பெற்றுக்கொண்டு அவளை விவாக ரத்துச் செய்வதற்கு கணவனுக்கு உரிமையுண்டு. இரு ப்பினும் அவள் அவற்றிலிருந்து தவ்பாச்செய்து திருந்தி விட்டாள் என்று தெரிந்தால் அவளுக்கு திருந்த ஒரு சந்தர்ப்பம் கொடுத்து மன்னித்து அவளோடு சேர்ந்து வாழ்ந்தால் அது அல்லாஹ்விடம் நன்மையைப் பெற்று த்தரும் ஒரு நல்ல காரியமாகும். இது கணவன் விடயத் திலும் பொருந்தும்.

வினா21:

ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவது எப்படியான குற்றம் ?. இதற்கான பரிகாரம் என்ன?.

பதில்: ஓரினப்புணர்ச்சியில் ஈடுபட்ட இருவரும் அவ் விடயம் யாருக்கும் தெரியாதிருப்பின் அல்லாஹ்விடம் மனமுருகி தவ்பாச்செய்யவேண்டும். இது மிகக்கொடிய பாவமாகும்.இப்பாவத்தில் ஈடுபட்ட லூத் நபியுடைய கூட்டத்தாருக்கு அல்லாஹ் யாருக்கும் கொடுக்காத மிகப்

பெரிய–கொடூரமான தண்டனையை உலகிலேயே கொடுத்தான். அவர்களது கண்பார்வையைப் பறித்து குருடர்களாக்கி அலைந்து திரியவைத்தான். பாரிய இடியோசையை அனுப்பி அவர்களின் காதுகளை வெடித்துச் சிதறவைத்தான். அவர்கள்மீது கல்மழையைப் பொழிவித்தான். அவர்கள் வாழ்ந்த பூமியின் பகுதியை தலைகீழாகப் புரட்டி அத்தனை பேரையும் பூமிக்குள் சுரிவாங்கி அழித்து ஒழித்தான். எனவேதான் இக்குற்றத்துக்கு இஸ்லாத்தில் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது இக் குற்றத்தில் ஈடுபட்ட இருவரையும் வெட்டிக் கொலை செய்ய வேண்டும்.

நபியவர்கள் கூறுகின்றார்கள்..

"லூத் நபியின் கூட்டத்தினர் செய்ததப்பை(ஓரினச்சேர்க்கையை)யாராவது செய்யக்கண்டால் அவ்வாறு செய்தவரையும் செய்ய இடமளித்தவரையும் இருவரையுமே கொல்லுங்கள் என நபியவர்கள் கூறுகின்றார்கள்.

(அபூதாவூத் திர்மிதி இப்று மாஜஃ அல்பானியால் உறுதிப்படுத்தப்பட்டது பார்க்க இர்வாஉல் கலீல் .)

வினா22:

நான் ஒருகாலத்தில் சினிமா, மியூஸிக் டான்ஸ் போன்ற பலபாவச்செயல்களில் ஈடுபட்டிருந்தேன். இப்போது அல்

லாஹ்வின் அளிருனால் திருந்திவிட்டேன். அப்போது நான் உபயோகித்த சினிமா சிடி கேசட் மியூசிக் உபகரணங்கள் இப்போதும் என்னிடம் உள்ளன. இவை பெருமளவு பணம் மதிக்கத்தக்கவை. இவற்றை நான் யாருக்காவது விற்று விட்டு அப்பணத்தை நல்ல காரியங்களில் செலவு செய்யலாமா?

பதில்: ஹராமாக்கப்பட்ட பொருட்களை உபயோகிப்பது கூடாது என்பதுபோல் அவற்றை தனக்காகவோ பிறருக்காகவோ விற்பதும் வாங்குவதும் ஹராமாகும்.

நபியவர்கள் கூறுகின்றார்கள்... “அல்லாஹ் ஒருபொருளை ஹராமாக்கிவிட்டால் அதை விற்றுப்பெறும் பணத்தையும் ஹராமாக்கி விடுவான்.” ( அபூதாவுத்)

இவ்வாறே நமக்கு சாப்பிட ஹராமாக்கப்பட்ட பொருள்களான செத்த பிராணிகள் அவற்றின் இரத்தம் போன்றவற்றை அதை உண்ணும் மாற்று மதத்தினருக்கு க்கூட விற்பது ஹராமாகும்.

பின்வரும் ஹதீஸைப் பார்...

நிச்சயமாக அல்லாஹ் மதுபானம்,செத்த பிராணிகள், பன்றி, சிலை ஆகியவற்றை விற்பனைசெய்வதை ஹராமாக்கி விட்டான் என்று நபியவர்கள் கூறியபோது ஒரு

வர் செத்த பிராணிகளின் கொழுப்பு விளக்கு எரிப் பதற்கும், தோல்களை மிருதுவாக்கவும் கப்பல்களுக்கு பூச்சு வேலைக்கும் பயன்படுத்தப்படுகின்றது. அதனால் அதன் சட்டம் என்ன என்று கேட்டதற்கு நபியவர்கள் இல்லை! அது ஹராமாகும்.யஹூதிகளுக்கு அல்லா ஹ்வின் சாபம்உண்டாகட்டும். அவர்களுக்கு அல்லாஹ் கொழுப்பை ஹராமாக்கியதும் அதை வேறுவடிவத்தில் அலங்கரித்து விற்பனைசெய்து அந்தப் பணத்தை சாப்பி ட்டார்கள் என்று கூறினார்கள்.( திர்மிதி )

ஹராமாக்கப்பட்ட பொருள் எப்பொருளாய் இருப்பினும் அதை உபயோகிப்பது விற்பனை செய்வது இரண்டுமே ஹராமாகும். எனவே அவற்றை அழித்துவிட வேண்டி யதுதான். அல்லாஹ் அதனால் ஏற்படக்கூடிய நட்ட த்துக்கு ஈடாக அதைவிடச் சிறந்ததைத் தருவதற்கு போதுமானவன்.

**வினா23:**

நான் ஒரு எழுத்தாளன். முற்காலத்தில் மோசமான சிந்தனைப்போக்கு உடையவனாக இருந்தேன். எனது பல்வேறு கட்டுரைகளில் நாஸ்திகத்தை ஆதரித்தும் இறைவனை மறுத்தும் எழுதி வந்துள்ளேன். அதுமட்டு மல்ல பெண்ணுரிமை எனும் போர்வை யில் மேர்க்குலக கலாச்சாரம், தப்பான பாலியல் தொடர்புகள்,பாவச் செய

ல்களையெல்லாம் நியாயப்படுத்தியும் இஸ்லாம் பிற் போக்கினை போதிக்கின்றது என்ற கருத்தில் எழுதியும் பேசியும்வந்துள்ளேன். இப்போது அல்லாஹ் எனக்கு நேர்வழி காட்டிவிட்டான் நான் திருந்திவிட்டேன். மேற்படி வீடயத்தில் நான் என்ன செய்ய வேண்டும்.?

பதில்: உனக்கு நேர்வழி காட்டியதன் மூலம் பலரது ஈமான் கெட்டுப்போவதை விட்டும் பாதுகாத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

தன் நாவாலும் பேனா முனையாலும் அல்லாஹ்வோடு, இஸ்லாத்தோடு போர்புரிந்து திருந்திய உன்னைப் போன்றோர் பின்வரும்விடயங்களைத் செய்தாகவேண் டும் .

முதலாவதாக.. தான் அந்த சிந்தனையிலிருந்து திருந்தி தவ்பாச் செய்து விட்டதை பகிரங்கமாக– உன் கருத்துக்க ளை எதன் மூலம் பரப்பினாயோ அவற்றின் மூலம் மக்க ளுக்குத் தெரியப்படுத்த வேண்டும். நீ இப்போது அக்கரு த்தை தப்பென உறுதியாக நம்புவதாகவும் முன்னர் பேசியவற்றை வாபஸ் வாங்கிக் கொள்வதாகவும் அறிவி க்க வேண்டும்.

இனிமேல் அக்கருத்துக்களை தன் பெயரில் யாரும் வெளியிடக்கூடாது எனவும் தனக்குத்தெரியாமல்வெளி


இஸ்லாம்கல்வி.காம்
islamkalvi.com

யிடப்பட்டால் அதற்கு நான் பொறுப்பல்ல எனவும் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

அதேபோல் இனி உனக்கிருக்கும் ஆற்றலை வைத்து இஸ்லாத்தைப்பற்றி அறிந்து அதைப்பற்றி எழுது. இஸ்லாமிய எதிர்ப்புக்கொள்ளைகளின் போலித்தனத்தைத் தோலுரித்துக்காட்ட உன்நாவையும் பேனா முனையையும் பயன்படுத்து.

இவ்வாறே ஒரு அறிஞரோ முப்தியோ இஸ்லாம் என்ற பெயரில் மக்கள்மன்றத்தில் ஒரு தவறான செய்தியை தெரிந்தோ தெரிாமலோ சொல்லிவிட நேர்ந்தால் அதைவிட்டும் மீண்டு தவ்பாச்செய்ததும் மக்களுக்கு பகிரங்கமாகவே அச்செய்தியை சொல்லி விளக்கிவைப்பது இஸ்லாமியக் கடடையாகும்.

## தாமதம் வேண்டாம் நண்பா!

என் அன்புக்குரிய நண்பா! நம்வாழ்நாளே அற்பமானது. அதிலும் அதிகமானதை நீ வாழ்ந்து முடித்து விட்டாய். இருக்கப்போவதோ மிகச்சொற்பம். அதுவும் எப்போது முடியும் எனத்தெரியாது. அது நாளையாக வும் இருக் கலாம்.

முஸ்லிமாகப் பிறந்தவன் முஸ்லிமாகவே மரணிக்க வேண்டும்.அதுதான்கௌரவம். சிலவேளை காபிராகப் பிறந்தவன் கூட முஸ்லிமாக மரணித்து விடுகின்றான். காபிராகப் பிறந்தவன் இஸ்லாத்தை ஏற்காது காபிராக மரணிப்பதே மனதுக்கு வேதனையை அளிக்கின்றது. அப்படியிருக்க முஸ்லிமாகப் பிறந்த ஒருவன் நரக வாதியாக மரணிப்பது எவ்வளவு பெரிய நட்டம் கைசேதம் என்பதை எண்ணிப்பார். நீயும் உன் பாவ ங்களை விட்டுவிட்டு அதிலிந்து தவ்பாச் செய்யாது மரணித்தால் உன்நிலையும்அதுதானே! அப்படியானால் உன் தாய் உன்னை 10 மாதம் சுமந்தது, சிரமப்பட்டது

மரணப்போராட்டத்தின் மத்தியில் உன் னைப்பிரச வித்தது, தன் இரத்தத்தை உனக்கு பாலாக ஊட்டியது, தாலாட்டியது, சோறூட்டியது உன்னை கண்ணைக் காப்பதை விடவும் நன்றாகக் காத்தது, உனக்காக தன்சுகதுக்கங்களை தூக்கத்தை தியாகம் செய்தது இவை அனைத்தும் நீ இறுதியில் நரகத்துக்குப் போக வேண்டும் என்பதற்காகத் தானா?..

அப்படியாயின் உன் தாயும் தந்தையும் உனக்காக இத் தனை கஸ்டங்களையும் சகித்தது வீண்தானா? உனக்காக அவர்கள் பட்ட சிரமத்துக்குப்பதிலாக சில ஆடுமாடுகளை வளர்த்திருந்தால் இன்று அவை அவர்களுக்குப் பலனளி த்திருக்குமே! ஆனால் உன்னால் அவர்களுக்கு எப்பல னும் இல்லையே! அது மட்டுமா? உன்னைப் பெற்றத ற்காக அவர்களுக்கு சமூகத்தின் மத்தியிலும் தலைகுனிவு அவப்பெயர். மறுமையில் அத்தனை மக்கள் கூட்டத்தின் மத்தியிலும் தலைகுனிவு. இது தேவைதானா??

அல்லாஹ் கூறுவதைக் கேள்..

இவ்வுலகில் என்னை நினைவுகூராது வாழ்ந்தோருக்கு மிக நெருக்கடியான வாழ்க்கை இருக்கின்றது. மறுமை யில் அவனை நாம் குருடனாக எழுப்புவோம். அப்போ தவன் என்றப்பே ! நான் உலகில் கண்பார்வையுள்ள வனாகத்தானே இருந்தேன்?என்னை ஏன் குருடனாக

எழுப்பியிருக்கின்றாய்? எனவினவுவான். அதற்கு அல் லாஹ் ஆம் அப்படித்தான் செய்வேன் . ஏனெனில் (உல கில்) எனது அத்தாட்சிகள் உன்னிடம் வந்தபோது அவற்றைமறந்து (குருடன்போல்) வாழ்ந்தாய். அதனால் இன்றைய தினம் நீயும்(என் அருளை விட்டும்) மறக்கப் பட்டுவிட்டாய். இவ்வாறே நாம் உலகில் படைத்தவனி ன் அத்தாட்சிகளை நம்பாது (காலத்தை) விரயம் செய்த வனுக்குக் கூலிவழங்க இருக்கின்றோம். இன்னும் மறு மையில் அவனுக்குள்ள வேதனை மிகக்கடு மையான தும், என்றென்றும் நிரந்தரமானதுமாகும்.(தாஹா :124)

ஆகவே நண்பா! நீ நல்லதொரு முடிவெடுக்க வேண் டும். நீ போகும் பாதையை மாற்ற வேண்டும் . உன் வாழ் நாளில் பெரும் பகுதியை வீணாக்கிவிட்டாய் ,மிகு தியுள்ளவற்றையாவது நீ உபயோகப்படுத்தக்கூடாதா? காலம் பொன்னானது. அதை இது வரைக்கும் மண் ணாக்கி விட்டாய்!. இது வரை தூங்கியது போதும் . இனியாவது நீ விழித்துக் கொண்டால் அது அல்லாஹ் நீ திருந்துவதற்காக உனக்களித்த இறுதிச் சந்தர்ப்பம் . அரிய வாய்ப்பு , அதையும் வீணாக்கி விடாதே ! போதும் நண்பா! போதும்!.இத்தோடு நிறுத்திக் கொள். நான் என்னைப்படைத்தவனுக்கு விசுவாசமாய் நடப்பேன் என்று மனதில் உறுதிகொள். பாவச்சுமைகளை அவன் முன்னிலையில் இறக்கி வை . ஆம் தவ்பாச் செய் .



இஸ்லாம்கல்வி.காம்
islamkalvi.com

அவனிடம் மன்றாடி உனது பாவங்களுக்காக மன்னிப் கோரிடு. அழு,அழு நன்றாக அழு உன் இதயச் சுமை குறையும் வரைக்கும் அழுதிடு , இனிமேல் பாவம் செய் வதில்லை,தொழாதிருப்பதில்லை, ஐவேளை ஜமாஅத் தொழுகையைத் தவற வசிடுவதில்லை என உன்னுடன் நீயே உறுதி மொழி எடுத்துக் கொள் .

அல்லாஹ்வை நம்பியோருக்கு அவர்களின் இதயங்கள் அவனை அஞ்சிப்பயந்து நினைவு கூர்ந்திட இன் னும் நேரம் வர வில்லையா?

தமக்குத் தாமே அநியாயம் செய்து கொண்ட எனது அடி யார்களே ! .. நீங்கள் அல்லாஹ்வின் அருளை (மன்னி ப்பை) விட்டும் நிராசையாகி விட வேண்டாம் . நிச்சய மாக அல்லாஹ்(உங்கள்)அனைத்துப் பாவங்களையும் மன்னிப்பான் . நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்போ னும் கிருபையுள்ளவனுமாவான்.(ஸூரா அல் ஹதீத்53 )

நண்பா! தவ்பாவின் வாசல் விசாலமானாது. நபிய வர்கள் சொல்கின்றார்கள்.. தவ்பாவின்வாயல் விசா லமானது அதன் இரு கதவுகளுக்கும் இடைப்பட்ட தூரம் 70 ஆண்டுகால பயண தூரமாகும். சூரியன் மேற்கிலி ருந்து உதயமாகும் வரைக்கும் அது மூடப்பட மாட்டாது.

(தபறானி: அல்பானியால் உறுதிப்படுத்தப் பட்டது. ஸஹீஹுல் ஜாமிஉ 2177)

அல்லாஹ் தன் அடியார்களை இப்படி அழைக்கின் றான்..

"என் அடியார்களே! நீங்கள் இரவிலும் பகலிலும் பல பாவங்கள் செய்திருக்கின்றீர்கள். நானோ உங்கள் பாவமனைத்தையும் மன்னிப்பவனாயிருக்கின்றேன்.எனவே என்னிடமே பாவமன்னிப்புத்தேடுங்கள் உங்களை நான்மன்னிக்கின்றேன்..( ஸஹீஹுல் முஸ்லிம்)

பின்வரும் சம்பவத்தைப் படித்துப் பார்..

ஒருமுறை நபியவர்கள் யுத்தம் நடந்து முடிந்த பின் அங்குள்ள கைதிகளைப் பார்த்துக் கொண்டிருந்த வேளை அங்கொரு பெண் பதற்றத்துடன் ஆங்காங்கே ஓடோடிச் சென்று எதையோ தேடிக்கொண்டிருந்தாள். பின்னர் கைதிகளுக்கு மத்தியில் தன்னுடைய சின்னஞ்சிறு குழந்தையைக் கண்டதும் சந்தோச மேலீட்டால் ஆனந்தக் கண்ணீர் விட்டவளாக அதை எடுத்து உச்சிமோந்து வயிற்றுடன் அணைத்து பாலூட்ட ஆரம்பித்தாள். இதனைக் கண்ணுற்ற நபியவர்கள் தம் தோழர்களை நோக்கி இப்பெண் தனது இந்தச் சிறு குழந்தையை தீயில் தூக்கி வீசுவாள் என்றாள் நம்புவீர்களா? என்றதும் அதற்கு அவர்கள் ஒருபோதும் இல்லை யாரஸூலல்லாஹ் என்

றார்கள் உடனே நபியவர்கள் இப்படித்தான் அல்லாஹ் தன் அடியார்களான உங்கள் மீது வைத்துள்ள அன்பு

இதைவிட நூறு மடங்கு அதிகமானது என்றார்கள்.
( ஸஹீஹ் முஸ்லிம் )
நபியவர்கள் சொல்லியுள்ளார்கள்.. அல்லாஹ்விடம் உள்ள றஹ்மத் இரக்கத்தில் நூறில் ஒரு பகுதியையே தனது படைப்பினங்களுக்கு மத்தியில் பங்குவைத்துக் கொடுத்தான். எஞ்சிய 99 பகுதிகளையும் மறுமை நாளில் அடியார்களுக்கு இரக்கம் காட்டுவதற்காக வைத்துள்ளான். அந்த ஒருபகுதி கருனையைப் பெற்றதாலேயே ஒரு மிருகம்கூட தன் குட்டிக்குப் பால் கொடுக்கும்போது தன் காலால் மிதித்து விடாதிருப்பதற்காக காலை உயர்த்திக் கொள்கின்றது என்றார்கள் . ( முஸ்லிம் )

எனவே நண்பா அல்லாஹ்வின் விசாலமான கருனையில் உனக்கொரு இடம் இல்லாமலாபோகும். அவன் உன்னை மன்னிக்கத் தயார் நீ அவனிடம் மன்னிப்புக் கேட்கத்தயாரா? அதை நீ செய்தால் இன்றிலிருந்து நீயொரு புதிய மனிதன். இனிமேல் நீ பழைய அவன் அல்ல புரிந்ததா?

ஒரு அடியான் தவ்பாச் செய்ய முன்வந்தால் அல்லாஹ் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றான். அல்லாஹ் மகிழ்ச்சி

யடைந்தால் அருளப்போகும் நன்மைகளை யாரேனும் இழக்கத் தயாராவார்களா??

நபியவர்கள் சொல்கின்றார்கள்..

“ஒருமனிதன் தன் ஒட்டகத்தில் உணவு நீர் தேவை யான வற்றை எடுத்துக் கொண்டு பாலைவனத்தில் பயணம் செய்கின்றான். அங்கு இடைவெளியில் களைப்பின் கார ணத்தால் ஒட்டத்தை நிறுத்தி வைத்து விட்டு அயர்ந்து தூங்க ஆரம்பிக்கின்றான். கண்விழித்துப்பார்த்ததும் என்ன ஆச்சரியம் அங்கே ஒட்டகத்தையும் காணோம்! அதிலிருந்த பொட்டலத்தையும் காணோம். அதிர்ச்சி யடைந்த அவன் அங்குமிங்கும் தேடிப் பார்க்கின்றான் . எங்குமே காணோம். இந்த நட்ட நடுக்காட்டில் உணவி ன்றி நீரின்றி எப்படி வாழ்வது யாரிடம் கேட்பது என்று யோசித்து அவனால் முடிந்தளவு தேடி அலுத்துப்போய் இனிமேல் தேடிப்பயனில்லை. இங்கேயே செத்து மடிய வேண்டியதுதான் என்று எண்ணிக்கொண்டு அதே இடத் திலேயே மீண்டும் தூங்க ஆரம்பிக்கின்றான். என்ன ஆச்சரியம்!! கண்விழித்துப் பார்த்தபோது அவனது ஒட்ட கமும் அதிலிருந்த உணவுப் பொட்டலமும் அப்படியே தன் கண் முன்னே இருக்கக் கண்டான். இப்போது இம் மனிதன் மகிழ்ச்சி மேலீட்டால் யாஅல்லாஹ் நான்உன் அடிமை நீ என்எஜமான் என்பதற்கு பதிலாக“ நான்

உன் எஜமான் நீ என் அடிமை என்று சொல்லி விடுகின் றான். இந்த மனிதன் அடைந்த சந்தோசத்தை விட அதிக மாக அல்லாஹ் ஒருமனிதன் தவ்பாச் செய்யும் போது மகிழ்ச்சியடைகின்றான் என்றார்கள் .( முஸ்லிம் )

பார் நண்பா! உன்னோடு அல்லாஹ் வைத்திருக்கும் அன்பு எவ்வளவு ஆளமானது என்று. ஆனால் நீயோ இவ்விடயத்தில் அலட்சியமாக இருக்கின்றாய். கூட் டத்தில் தன் தாயைத் தொலைத்த பச்சிளங்குழந்தை தன் தாயைக் கண்டதும் அதற்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு எல்லை யுண்டா? அந்தத் தாய் அடையும் மகிழ்ச்சிக்குத்தான் அளவுண்டோ? அன்னையன்புக்கும் உண்டோ அடைக் கும் தாழ்! என்பார்கள். அல்லாஹ் நீ திருந்தப் போவதை யிட்டு இந்தத் தாய் அடையும் மகிழ்வை விட 100 மடங்கு அதிகம் மகிழ்கின்றான். ஆனால் தாயை இழந்து தவித்த குழந்தை தாயைக் கண்டவுடன் ஏற்படும் உணர்வு போல் உனக்கு ஏற்பட வில்லையா?

எனவே இவற்றையெல்லாம் விட்டுவிடு. நீ இப்படி துஆக் கேட்கப் பழகிக்கொள்.

யாஅல்லாஹ் நீ எனக்கு அருள்புரிவாயாக. உன்னைத் தவிர எனக்கு இரக்கம் காட்டுவோய் யார் இருக்கின் றனர்.எனக்கு நீ உதவிசெய். உன்னையன்றி எனக்கு உதவுதோர் யார் உளர்?. நீ என்னைக் கைவிட்டால்



இஸ்லாம்கல்வி.காம்
islamkalvi.com

எனக்கு அடைக்கலம் தருவோர்யார்?.எனக்கு உதவி செய்வோர் யார்?. நான் உன் அடிமை, உன் எளிய ஏழை, உன்னிடம் இறைஞ்சுபவன் என்னைக் காப்ப வன் நீயே! நான் தஞ்சமடைவதும் உன்னிடமே! உன்னை விட்டால் என்னைக் காப்பவரோ எனக்கு அபயமளிப்பவரோ யாரு மில்லை'' என்று கூறி அல்லாஹ் வின் முன்னிலையில் சரணாகதியாகி விடு.

சினேகிதனே ! நீசெய்து கொண்டிருந்த பாவம் எவ்வள வு மகா கெட்டது என்பதைப் பார்த்தாயா? . ஆனால் அதே பாவத்தை நீ தொடர்ந்து செய்ததால் அது பாவ மென்றே தெரியாதளவுக்கு உன் உள்ளம் வலித்து விட்ட தே பார்த்தாயா ? உன் றப்பு உன்னை மன்னிக்கக் காத்தி ருக்கின்றான் என்பதைக்கூட தெரியாதளவுக்கு பாவத் திரை உன் பகுத்தறிவை, உன் சுய நினைவை, உன் புத்தியை மறைத்து விட்டதே பார்த்தாயா?

எனவே இன்றே நீ தவ்பாச் செய்வாயல்லவா? ஆம் . அதைத் தாமதப் படுத்தாதே! அல்லாஹ்விடம் தஞ்ச மடைந்து விடு . அவன் உன்னைக் கைவிட்டால் வேறு உன்னைக் காப்பவர் யார் ? அவனிடம் கை யேந்தியோர் என்றுமே கைசேதப்பட்டதில்லை . கடவுளை நம்பினார் கைவிடப் படார்!! .


இஸ்லாம்கல்வி.காம்
islamkalvi.com

அதே போல் நீ செய்த ஏனைய பாவங்களுக்காகவும் சேர்த்தே தவ்பாச் செய்துவிடு. இனிமேல் அவற்றை விட்டு முழுமையாக விலகிவிடு . அவை பற்றிய எண்ண ங்களைக் குழிதோண்டிப் புதைத்துவிடு. இன்றிலிருந்து நீயொரு புதிய மனிதன் இன்றிலிருந்து நீ பழைய அவன் இல்லை .

(அல்லாஹ்வின் அருள் எம்அனைவர்மீதும் உண்டாகட்டும் .)

## மார்க்க அறிவின் அவசியம் பற்றி...

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்..

📖 மார்க்க அறிவைப் படிக்கச்செல்பவருக்குச் சுவனம் செல்லும் பாதையை அல்லாஹ் இலகு படுத்துகின் றான் . —திர்மிதி

📖 மார்க்கத்தைப் படிக்கச் செல்பவருக்கு மலக்குகளும் ஏனைய உயிரினங்களும் கடலிலுள்ள மீன்களும் இஸ்திக்பார் பாவமன்னிப்புக் கோருகின்றன. திர்மிதி

📖 மார்க்கக் கல்வியைத் தேடிப்படிப்பது ஒவ்வொரு இஸ்லாமியன் மீதும் கட்டாயக் கடமையாகும். – இப்னுமாஜா

📖 மார்க்கக்கல்வி கற்பதற்காக ஒருவர் புறப்பட்டுச் சென்றால் அவர் மீண்டு வரும்வரை இறை வழியில் போர் புரிந்தவர் போலாவார் . திர்மிதி.

📖 அறிவைக் கற்றவருக்கும் கற்காதவருக்குமிடையில் உள்ள வேறுபாடு எப்படியெனில் எனக்கும் உங்களில் மிகத்தாழ்ந்தவருக்கும் இடையிலுள்ள வேறு பாட் டைப்போன்றதாகும் .– முஸ்லிம்

📖 நேர்வழியின் பக்கம்எவர் வேறொருவருக்கு அழை ப்பு விடுக்கின்றாரோ அந்த (நேர்வழி பெற்றவர்)

செய்யும் நன்மையின் அளவு இவருக்கும் கிடைக்கும். – புகாரி முஸ்லிம்

📖 –அல்லாஹ் எந்த நபருக்கு நன்மைசெய்ய விரும்பு கின்றானோ அவருக்கு மார்க்க விடயங்களைக் கற்று க்கொடுப்பான்.(கற்றுக்கொள்ளும் மனோபாவத்தைக் கொடுப்பான் –புகாரி

📖 மார்க்க அறிவுள்ளவர்கள் குறைந்து விடுவது இறுதி நாள் ஏற்படுவதற்கான அடையாளமாகும் . – திர்மிதி

📖 எனது ஹதீஸ்களில் ஒன்றைக் கற்றறிந்து பின் அதனைப் படித்தபடியே பிறர் ஒருவருக்குக்கும் கற் றுக்கொடுக்கும் மனிதருக்கு அல்லாஹ்வின் சோப னம் உண்டாகட்டும் – புகாரி

📖 எவர் அறிவைக்கற்கப் புறப்பட்டு விட்டாரோ அது அவரது கடந்தகாலப் பாவங்களுக்குக் குற்றப் பரிகார மாகிவிடுகின்றது – திர்மிதி

📖 மனத்தூய்மையின்றி பெருமையடிப்பதற்காகவோ, பிறருடன் அகம்பாவமாக நடப்பதற்கோ, அறியாதோ ரைக் கேலிசெய்யும் நோக்கிலோ கல்வியைக் கற்கும் மனிதர் நரகத்துக்கே செல்வார்...திர்மிதி